# வரி உயர்வு ஆட்சேபங்களுக்கு தகுந்த விசாரணை நடத்தப்படும்


Registered as a News paper in Ceylon    விலை சதம் 15    ★ ★

# ஈழநாடு

EELANADU    மலர் 11

தபால்பெட்டி எண்: 49    இதழ்: 25

போன்: 389    National Tamil Daily    தேசிய தினசரி

யாழ்ப்பாணம்    மாசி 24    ஜுஹஜ்: 17    வெள்ளிக்கிழமை (7-3-69)







## யாழ். மேயர் உறுதி

யாழ்ப்பாணம், வெள்ளி

''புதிய வரிமதிப்பீட்டின் காரணமாக தனித்தனி ஆதனங்களின் மதிப்பு ஓரளவு கூடுதலாக இருக்குமே தவிர சிலரது விஷமப் பிரசாரங்களில் சொல்லப்பட்டது போல 30 சத வீதமாக அதிகரிக்கப்படவில்லை. நகரமுன்னேற்றத்தில் அக்கறையுள்ள வரியிறுப்பாளர் புதிய வரி மதிப்பீட்டை பொருட்படுத்தமாட்டார்கள். ஆயினும் வரிவிகிதம் ஆகக்கூடுதலாக அதிகரிக்கப் பட்டிருப்பதாக மக்கள் தனித்தனியாக ஆட்சேபம் தெரிவிககும் பட்சத்தில் அதற்கு தகுந்த விசாரணை நடாத்தப்படும். சம்பந்தப்பட்ட வரியிறுப்பாளர்களுக்கு வேண்டிய வரிச் சலுகை நிச்சயமாகச்செய்து கொடுக்கப்படும்''

வரி உயர்வு சம்பந்தமாக யாழ். நகர மேயர் திரு. எஸ். நாகராசா வெளியிட்டுள்ள அறிக்கையொன்றில் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் அவ் அறிக்கையில் தெரிவித்துள்ளதாவது:

சோலைவரி அறவிடுவது ஒரு உள்ளூராட்சி மன்றத்தின் கடமையாகும். சோலைவரிதான் ஒரு உள்ளூராட்சி மன்றத்தின் பிரதானமான வருமானமாகும் சட்டத்தின் பிரகாரம் 5 வருடத்திற்கு ஒருமுறை ஆதனங்களை மதிப்பீடுசெய்யவேண்டியது அவசியமாகும். இதன் காரணமாக முறையே 1955, 1961 ஆகிய ஆண்டுகளில் பருவ மதிப்பீடுகள் நடைபெற்றது. கடைசியாக நடைபெற்ற மதிப்பீடு 1962-ம் ஆண்டிலிருந்து அமுலில் இருக்கின்றது. 1966-ம் ஆண்டில் 5 வருட முடிவுடன் மீண்டும் வரி மதிப்பீடு செய்யவேண்டுமென்று அப்போதைய ஆணையாளர் மாநகர சபையின் கவனத்திற்குக் கொண்டுவந்தார், மீண்டும் வரி மதிப்பீடு செய்யவேண்டுமென்ற கோரிக்கையை 1965-ம் ஆண்டு வைகாசி மாதத்தில் சபை பின்போடுவதென்று தீர்மானித்தது. அதே ஆண்டு ஆடி மாதத்தில் சபையின் கணக்காளர் திரும்பவும் வரி மதிப்பீடு செய்யவேண்டிய அவசியத்தைச் சபைக்குச்சுட்டிக்காட்டவே திரும்பவும் சபை இதைப் பரிசிலனை செய்தது. 1965-ம் ஆண்டு ஆவணி மாசத்தில் சபையின் நிதிக்குழு, சிபார்சு செய்ததின் பேரில் மார்கழி மாதம் நடந்த சபைக் கூட்டத்தில் வீடு வளவுகளினது

நகர சபை அங்கத்தவர்கள் ஏகமனதாகத் தீர்மானித்தனர். இத்தீர்மானம் எடுக்கும்பொழுது திரு. சு. செ. மகாதேவா முதல்வராக இருந்தார். அந்த முடிவின் பிரகாரம் மாநகர சபை ஆணையாளர், அரசாங்க பிரதம விலைமதிப்பாளருடன் தொடர்பு கொண்டார். 28-4-66ல் நடந்த நிதிக்குழுக்கூட்டத்தில் யாழ்ப்பாண மாநகரசபை எல்லைக்குள்உள்ள வீடு வளவுகளை திரும்பவும் வரி மதிப்பீடு செய்வது சம்பந்தமாக பிரதம விலைமதிப்பாளருக்குக் கொடுக்கவேண்டிய பணத்தை செலுத்துவதோடு, வீடு வளவுகளினது மறுமதிப்பீடு 1967லிருந்து அமுலாக்கும் முகமாக வேண்டிய நடவடிக்கைகளை எடுத்துக் கொள்ள, பிரதம மதிப்பாளரை வேண்டிக்கொள்வதென்றும் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது. இந்த நிதிக்குழுத் தீர்மானம் 17-5-66-ல் நடந்த சபைக் கூட்டத்தில். உறுதிப்படுத்தப்பட்டு சபையால் ஏற்றுக் கொள்ளப்பட்டது. இந்த நிதிக்குழுவுக்கும், சபைக்கும் தலைவராக இருந்தவர் அப்போதைய முதல்வர் திரு. அ. த. துரையப்பா பின்பு கடமையாற்றிய விசேட ஆணையாளர்களும் மேலே கூறப்பட்டுள்ள சபையின் தீர்மானத்தை அமுல் செய்யும் நோக்கத்துடன் நடவடிக்கைகள் எடுத்தார்கள்.

1967-ம்ஆண்டு தைமாதம் ரூபா 18,463 சதம் 34 விலைமதிப்பாளருக்கு அனுப்பி வைக்கப்பட்டது. அரசாங்க விலைமதிப்பாளர் சகல ஆதனங்களையும் 67-ம் 68-ம் ஆண்டுகளில் விலைமதிப்பீடு செய்தார்கள். இந்த மதிப்பீட்டைச் செய்தவர்கள் எல்லோரும் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்தவர்கள். அத்துடன் எமது நிலைமைகளை நன்கு மதித்த அரசாங்க உத்தியோகத்தர்களுமாவர். 69-ம் ஆண்டுக்குரிய வரவு செலவுத்திட்டம் சட்டத்தின்படி 68-ம் ஆண்டு முடிவடைவதற்கு முன்பு தயாரிக்கப்படவேண்டும். ஆகவே அப்போதிருந்த ஆணையாளர் திரு. க. பேரம்பலம், மதிப்பீடுகள் எல்லாம் பூர்த்தியாகிவிட்டதன் காரணத்தினால் சபை ஏற்கனவே எடுத்துக் கொண்ட தீர்மானத்தின் அடிப்படையில் புதிய மதிப்பீட்டின் பிரகாரம் வரக்கூடிய தொகையை சபையின் வருமானமாகக் கணித்து வரவுசெலவுத் திட்டத்

எமது மாநகரசபை அத்தியாவசியமான சேவைகளில் செலவுசெய்யவேண்டிய தொகைகள் அதிகரித்துக் கொண்டே போகின்றன. விலைவாசிகளில் உயர்வுகாரணமாக செலவுகள் அதிகரிக்கின்றன. கூடிய வசதிகளை நகரமக்களுக்கு ஏற்படுத்திக் கொள்ளவேண்டிய தலையாய கடமை எமக்கு உண்டு. அத்துடன் மின்சாரசேவையும் புனரமைப்புச் செய்யவெண்டிய நிலைமையும் ஏற்பட்டுவிட்டன. நவீன சந்தைஒன்றை அமைக்கவேண்டுமென்ற நகரமக்களின் ஆசையையும் பூர்த்தியாக்க வேண்டிய காலம் நெருங்கிவிட்டது. முன்னைய மாநகரசபையின் தீர்மானத்தின்பேரில் எடுக்கப்பட்ட விலைமதிப்பீடு நடவடிக்கைகளின் காரணமாக ஏற்கனவே சபைக்கு செலவாகியுள்ள தொகை ரூபா 56,414 சதம் 29 ஆகும்.

### பரிசீலனைக்கு உபகுழு

புதிய மதிப்பீடு செய்ததன் காரணமாக 4 ஆயிரத்துக்கும் அதிகப்பட்ட புதிய ஆதனங்கள் மதிப்பீடு செய்யப்பட்டிருக்கின்றன. கடந்த 5 வருடங்களுக்கும் மேலாக சரியான முறையில் வரிமதிப்பீடுசெய்யப்படாத ஆதனங்கள் எத்தனையா இந்தப் புதிய மதிப்பீட்டின் காரணமாக மதிப்பீடு செய்யப்பட்டுள்ளன. விகிதாசார அடிப்படையில் இந்த வரிமதிப்பு உயர்த்தப்பட்டிருக்கின்றது என்று சொல்வது தவறு. வருட மதிப்பின் 12 1/2 விகிதமும் 14 1/2 விகிதமும்தான் இன்றும் அமுலில் இருக்கின்றது. புதிய மதிப்பீட்டின் காரணமான தனித்தனி ஆதனங்களின் மதிப்பு ஓரளவு கூடுதலாக இருக்குமேதவிர சிலரது விஷமப் பிரசாரங்களில் சொல்லப்பட்டதுபோல 30 சதவீதமாக அதிகரிக்கப்படவில்லை. இந்தப் புதிய மதிப்பீட்டின் காரணமாக ஏற்கனவே வரியிறுப்பாளர்கள் தாங்கள் கட்டிவரும் கந்தாய வரிப்பணத்தில் 50 சதம் தொடக்கம் 2-50 ரூபாய்வரையில்கூடுதலாகக் கட்டவேண்டியேற்படலாம். பெரும் வர்த்தகநிலையங்கள் மற்றுமுள்ள பெரிய நிலையங்கள், தொழில் ஸ்தாபனங்கள், பெரிய வீடுகள் இவைபோன்றவை உரிமையுள்ளவர்களுக்கு கட்டவேண்டியகந்தாயப்பணம் 5 ரூபாய் தொடக்கம் 10 ரூபாய்வரைக்கும் அதிகரிக்கக்கூடியதாயிருக்கும். வரி

சர்வாதிகார ஆட்சி அமைக்க முயன்றவர் யார்?

# பொதுமக்களுக்கு உண்மை நிலைமையைவிளக்கவேண்டும்

## அரசாங்க கட்சி எம். பி. க்கள் பிரதமரிடம் வற்புறுத்தல்

கொழும்பு, வெள்ளி

நண்பர்கள்போல் நடித்து இலங்கையில் சர்வாதிகார ஆட்சி அமைக்க முயன்றவர்கள் பற்றிய முழுத் தகவல்களையும் வெளியிடும்படி அரசாங்கக் கட்சியைச் சேர்ந்தவர்களும் பிரதமரை வற்புறுத்தியுள்ளனர்.

குளியாப்பிட்டியா யு. என் பி. மகாநாட்டில் பிரதமர் வெளியிட்ட இந்த விஷயம் சம்பந்தமாக எதிர்க்கட்சியினரும் ஆட்சிமன்றத்தில் கேள்வி எழுப்ப விருப்பதாகவும் தெரியவருகிறது.

தமது பெயரைப் பயன்படுத்தி சர்வாதிகார ஆட்சியை அமைப்பதற்காக தம்முடன் நண்பர்கள் போல் நடித்த சிலரைக் கண்டுபிடித்து காக்கிவிட்டதாக பிர

குளியாப்பிட்டியா மகாநாட்டில் பேசியிருந்தார்.

பிரதமரின் இந்த மறைமுகப் பேச்சு ராஜாங்க அமைச்சரையே குறிப்பிட்டதாக பலமான வதந்தியொன்று அடிபடுவதால் இதனை பொதுமக்களுக்கு தெளிவுபடுத்தி உண்மை நிலையை விளக்கவேண்டுமென அரசாங்கக் கட்சியைச் சேர்ந்த எம். பிக்கள் பலர் பிரதமரைக் கேட்டுக் கொண்டுள்ளனர்.

அரசாங்கக் கட்சிக் குழுக் கூட்டத்திலேயே எம். பி.க்கள் பிரதமரை இதுபற்றி ஆட்சி மன்றத்தில் விபரமான தெளிவான விளக்கம் கொடுக்கப்படவேண்டுமென வற்புறுத்தினர்.

ஆட்சிமன்றத்தில்சர்வாதிகார ஆட்சியை அமைக்க

## அண்ணா கூட்ட எதிரொலி; இன்ஸ்பெக்டர் இடமாற்றம்?

யாழ்ப்பாணம், வெள்ளி.

வட பகுதியைச் சேர்ந்த பொலிஸ் இன்ஸ்பெக்டர் ஒருவருக்கும், அண்ணா அனுதாபக் கூட்டம் ஒன்றுக்கும் இடையிலுள்ள தொடர்பு பற்றி பொலிஸ் அதிகாரிகள் இப்போது விசாரணை நடத்திவருகின்றனர்.

அண்ணா அனுதாபக் கூட்டத்துக்கு ஒலிபெருக்கி பாவிக்க 10 மணிவரை அவகாசம் கொடுத்துவிட்டு, 9மணிக்கே ஒலிபெருக்கியைத் தடை செய்ததாக குறிப்பிட்ட பொலிஸ் இன்ஸ்பெக்டருக்கு எதிராக புகார் செய்யப்பட்டுள்ளதாம்.

இது மட்டுமின்றி வேறு சில அண்ணா அனுதாபக் கூட்டங்களுக்கும் ஒலிபெருக்கி பாவிக்க முற்றாகத் தடை விதித்ததாகவும், கிடைத்த சில தகவல்களைத் தொடர்ந்தே குறிப்பிட்ட பொலிஸ் இன்ஸ்பெக்டர் பற்றி இப்போது விசாரணை நடத்தப்படுகின்றதாக தெரிய வந்துள்ளது.

சம்பந்தப்பட்ட இன்ஸ்பெக்டர் விரைவில் இங்கிருந்து இடமாற்றம் செய்யப்படலாமெனவும் பொலிஸ் வட்டாரங்கள் எதிர்பார்க்கின்றன.

(கா. நி.)

## மே மாதத்தில் பொதுத் தேர்தல்?

பம்பலப்பிட்டி, வெள்ளி

ஆட்சிமன்றம் இம்மாதம் 27-ம் திகதி கலைக்கப்படலாம் என அரசியல் வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

பொதுத் தேர்தல் மே மாதம் முதல்வாரத்தில் நடைபெறுமெனவும் எதிர்பார்க்கப்படுகிறது.

## தேசிய சுவீப்

## தற்கொலை அல்ல கொலை: பொலிசார் சந்தேகம்

சாவகச்சேரி, வியாழன்துள்ளது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

க்கு எதிராக புகார் செய்யப்பட்டுள்ளதாம். எதிர்பார்க்கின்றன.

(கா. நி.)

## தற்கொலை அல்ல கொலை: பொலிசார் சந்தேகம்

சாவகச்சேரி, வியாழன் துள்ளது.

கிளிநொச்சியில் நஞ்சருந்தி இறந்ததாகக் கருதப்பட்ட பாலசிங்கம் என்பவரின் மரணத்தில் ஓர் புதிய திருப்பம் ஏற்பட்டுள்ளது. கடந்த ஜனவரி 27-ந் திகதி இறந்த பாலசிங்கம் என்பவரின் மரணம் குறித்து கிளிநொச்சிப் பொலிசால் நடத்திய விசாரணையில் பாலசிங்கம் நஞ்சூட்டப்பட்டுக் கொலை செய்யப்பட்டுள்ளதாகத் தெரியவந் இச்சம்பவம் குறித்து துன்னலை வாசிகளான சங்கரப்பிள்ளை, தில்லைநாதன், வல்லி ஆகிய மூவர் மீதும் கிளிநொச்சிப் பொலிசார் நஞ்சூட்டிக் கொலை செய்ததாகக் குற்றம் சாட்டி சாவகச்சேரி மாஜிஸ்டிரேட் முன்னிலையில் வழக்கு ஒன்றை தாக்கல் செய்துள்ளனர். மாஜிஸ்டிரேட் வழக்கை இம்மாதம் 12-ந் திகதிக்கு ஒத்திவைத்தார்.

## மல்லாகம் கி. ச. தேர்தலில் 8 பேர் போட்டியின்றி தெரிவு

குரும்பசிட்டி, வியாழன்

17 வட்டாரங்களைக் கொண்ட மல்லாகம் கிராம சபைத் தேர்தலுக்கான அபேட்சா பத்திரங்கள் இன்று தேர்தல் அதிகாரி திரு. எஸ். கந்தசாமியினல் ஏற்றுக் கொள்ளப்பட்ட போது, 8 வட்டாரங்களில் போட்டியின்றி தெரிவுசெய்யப்பட்டவர்கள்விபரம் வருமாறு:-

முதலாம் வட்டாம்:- திரு. எஸ். இராசையா, 2-ம் வட்டாரம் திரு. கே. சண்முகம் 4-ம் வட்டாரம் திரு. எஸ். கதிரவேலு, 5 ம் வட்டாரம் திரு. வி. பொன்னம்பலம், 6-ம் வட்டாரம் திரு. வி. செல்லையா, 10-ம்வட்டாரம் திரு. எஸ். குருசாமி, 11-ம் வட்டாரம் திரு. வி. சிவரெத்தினம், 14-ம் வட்டாரம் திரு. எம். சுப்பிரமணியம். 5-ம் வட்டார தற்போதய அங்கத்தவர் திரு. வி. பொன்னம்பலம் மீண்டும் அதேவட்டாரத்தில் போட்டியின்றி தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

ஏனைய 9 வட்டாரங்களில் போட்டியிடுபவர்களின் விபரம் வருமாறு:-

3-ம் வட்டாரம்: எம். சின்னத்தம்பி, எம். உலகநாதன், 7-ம் வட்டாரம் எம். குகராஜா, வி. ராஜதுங்கம், ஆர். வேலுப்பிள்ளை, ஐ. சிவபாதம். 8-ம் வட்டாரம்:- எஸ். இராசையா, ஈ. காசிப்பிள்ளை, ஆர். நாகராஜா, 9-ம் வட்டாரம்: என். ஆர். செல்லத்துரை, கே. அருள்நாதன், ஈ. நாகராஜா. 12-ம் வட்டாரம்: ஏ. சரவணமுத்து, எஸ். கார்த்திகேசு, எஸ். சுந்தரலிங்கம், 13-ம் வட்டாரம்' ஏ.எஸ். தாமோதரம்பிள்ளை, எஸ். இரத்தினம். 15-ம் வட்டாரம் ரி. ராஜரெத்தினம்,, எஸ். சிறீதரன், 16-ம் வட்டாரம்: வி. செல்லத்துரை, பி. சுப்பிரமணியம். எஸ். பாலச்சந்திரன், 17-ம்வட்டாரம்: கே. தியாகராஜா, எஸ். பத்மநாதன், எஸ். கிருஷ்ணபிள்ளை.

சம்பந்தமாக எதிர்க்கட்சியினரும் ஆட்சிமன்றத்தில் கேள்வி எழுப்ப விருப்பதாகவும் தெரியவருகிறது.

தமது பெயரைப் பயன்படுத்தி சர்வாதிகார ஆட்சியை அமைப்பதற்காக தம்முடன் நண்பர்கள் போல் நடித்த சிலரைக் கண்டுபிடித்து துரத்திவிட்டதாக பிரதமர் டட்லி சேனநாயகா

## ஞாபகார்த்த நிலயம்

வல்வெட்டித்துறை, வியா.

வல்வெட்டித்துறையில் 67-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 8-ந் திகதி பொலிஸ் துப்பாக்கி சூட்டுக்கு இலக்காகி மரணம் அடைந்த இளைஞர் ஆர் சிவஞானசுந்தரத்தின் ஞாபகார்த்தமாக வல்வெட்டித்துறை பஸ் தரிப்பு நிலயத்தில் பஸ்தரிப்பு நிலயம் ஒன்று மரணம் அடைந்தவரின் தந்தையாரான திரு. வி. இராமசாமிப்பிள்ளை யினல் கட்டப்பட்டு முடியும் தறுவாயில் உள்ளது.

இக் கட்டிடம் அடுத்த மாத முற்பகுதியில் திறக்கப்படவிருக்கிறது.

அரசாங்கக் கட்சிக் குழுக் கூட்டத்திலேயே எம். பி.க்கள் பிரதமரை இதுபற்றி ஆட்சி மன்றத்தில் விபரமான தெளிவான விளக்கம் கொடுக்கப்படவேண்டுமென வற்புறுத்தினர்.

ஆட்சிமன்றத்தில்சர்வாதிகார ஆட்சியை அமைக்க முயன்றவர்கள் பற்றிய பெயர்களுடன் முழுத் தகவல்களையும் அறிக்கையொன்றின் மூலம் வெளியிட்டு பொதுமக்களிடையே ஏற்பட்டுள்ள சந்தேகங்களைப் போக்கும்படி அரசாங்கக் கட்சி எம். பி. க்கள் பிரதமரை வற்புறுத்திக் கேட்டுக்கொண்டனர்.

### எதிர்க் கட்சியினர் கேளவி எழுப்புவர்

ஆட்சிமன்றத்தில் பிரதமரின் குளியாப்பட்டியா பேச்சுச் சம்பந்தமாக எதிர்க்கட்சியினர் கேள்வி எழுப்பவிருப்பதாக அறியப்படுகிறது, இதற்கான முயற்சிகளில் எதிர்க்கட்சியினர்இப்போது ஈடுபட்டுள்ளனர்.

புனிதவதி கொலைவழக்கு

# "சண்டிக்கட்டுடன் எதிரியை அதற்குமுன் பார்த்ததில்லை"

## ஜூரிகளின் கேள்விக்கு சாட்சியின் பதில்

யாழ்ப்பாணம், வெள்.

''அன்று அமவாசை நாள். நல்ல இருட்டாக இருந்தது எதிரியை அதற்குமுன் நான் சண்டிக்கட்டுடன் பார்க்கவில்லை. அந்த உருவம் வெள்ளை உடை அணிந்திருந்தது முற்றத்தில் மரங்கள் ஒன்றும் இல்லை வெளிச்சமாக இருந்தது. என்ன வெளிச்சமென்று தெரியாது அந்த உருவத்தின் முகத்தை மட்டும் காணவில்லை: கை கால் எல்லாம் கண்டேன்.''

புனிதவதி கொலைவழக்கில் ஜூரிசபை தலைவரின் கேள்விகளுக்கு பதிலளிக்கும் போது கொலையுண்டவரின் மகள் சிவஞானத்திரு மேற்கண்டவாறு கூறினர்.

இவ்வழக்கு நேற்றுக்காலை வடபகுதி அஸைஸ் கோர்ட்டில் நீதியரசர் வி. ரி. பண்டித குணவர்த்தன முன்னிலையில், இரண்டாவது தினமாக விசாரணை செய்யப்பட்டது.

எதிரியின் வழக்கறிஞர். சில்வக சாட்சியமளித்த சிவஞானதிருவை நேற்று தொடர்ந்து குறுக்குவிசாரணை செய்தார்

வழ: உமது அறையில் ஒரு விளக்கு எரிந்துகொண்டிருந்தது?-ஆம்

வழ: கதவு திறந்தபோது வெளியில் வெளிச்சம் வந்தது?-கவனிக்கவில்லை.

வழ: பற்குணதேவிபோன தடவை சாட்சியமளிக்கவில்லை? இல்லை.

வழ: நீர் கண்ட சம்பவம் பற்றி முதன் முதல் பொலிசுக்கு கூறினீர்? பற்குணதேவிக்கும் சொன்னேன்

வழ: இச்சம்பவம் பற்றி முதலில் பொலிசாருக்கு தெரிவித்தது நடராசா? ஆம்

வழ: நடராசாவிற்கு உருவத்தைப்பற்றி சொன்னீரா? என்னை அவர் கேட்கவும் இல்லை நான் சொல்லவும் இல்லை

வழ: பற்குணதேவி விளக்கு கொண்டுவந்தார்? ஆம்

வழ: பொலிஸ் வாக்குமூலத்தில் நீர் அறைக்குள் ஓடிப்போய் விளக்கு எடுத்துவந்து பார்த்ததாக கூறினீரா? நான் அப்படிக் கூறவில்லை.

நீதியரசர்: எப்ப மயக்கம் வந்தது? அம்மாவைபார்த்தபோது

நீதி: ஏன்மயக்கம் வந்தது? இரத்தத்தை, பார்த்ததும்

நீதி: ஆளைத்துரத்திப் பிடிக்கக் கூடிய கைரியம் இருந்தது முதலில் அம்மாவை பார்த்தீரா? அம்மா வருவா என நினைத்தேன்.

நீதி: நீர் பயந்த பெண் இல்லை அந்த நேரம் உருவத்தை பிடிக்கப் போனீர்? ஆம்

நீதி; ஓடியும் இருக்கிறீர்? ஆம்

நீதி: பிறகு மயக்கம் வந்ததென்று சாட்டுக்கு சொல்லுகிறீர்? அதுக்காக சொல்லவில்லை.

வழ: தாயாரின் இரத்தத்தை பார்த்ததும் மயக்கம் வந்துவிட்டது? பயமாக இருந்தது.

வழ: நடராசாவை எப்ப கண்டீர்? பொலிசார் வந்தனர்.

# தேசிய சுவீப் முடிவுகள்

கொழும்பு, வெள்ளி

நேற்று இழுக்கப்பட்ட தேசிய லொத்தர் சபையின் 236-வது சுவீப் சீட்டிழுப்பு முடிவுகள் வருமாறு:-

முதலாவது பரிசு

32 R 0175 ரூ. 100,000

இரண்டாவது பரிசு

39 W 0876 ரூ. 40,000

மூன்ருவது பரிசு

04 Y 0761 ரூ. 10 000

தலா ரூபா 664-90 சதம் பரிசுபெறும் 100 டிக்கட்டுகள் வருமாறு;

| | |
|---|---|
| 23 A 0476 | 31 D 0582 |
| 20 A 0701 | 32 D 0532 |
| 05 A 0908 | 01 D 0532 |
| 41 A 0287 | 17 D 0854 |
| 42 B 0548 | 09 E 0993 |
| 21 B 0389 | 15 E 0550 |
| 25 B 0382 | 34 E 0713 |
| 36 C 0754 | 07 E 0973 |
| 41 C 0058 | 04 F 0859 |
| 34 C 0836 | 44 F 0361 |
| 31 C 0356 | 20 F 0452 |
| 29 C 0251 | 11 F 0332 |
| 18 C 0034 | 20 F 0310 |
| 06 C 0651 | 07 G 0228 |
| 11 G 0714 | 11 G 0853 |
| 42 J 0876 | 29 J 0619 |
| 18 J 0643 | 06 J 0576 |
| 21 K 0069 | 04 K 0444 |
| 33 K 0882 | 03 K 0369 |
| 10 L 0829 | 38 L 0021 |
| 24 L 0362 | 30 M 0592 |
| 39 N 9775 | 43 N 0591 |
| 29 N 0487 | 35 N 0986 |
| 03 N 0042 | 40 N 0408 |
| 03 N 0935 | 07 O 0514 |
| 21 O 0617 | 38 O 0638 |
| 44 O 0695 | 24 O 0568 |
| 33 P 0734 | 03 P 0929 |
| 21 P 0858 | 35 P 0547 |
| 16 P 0936 | 21 Q 0487 |
| 15 Q 0753 | 13 Q 0903 |
| 16 Q 0712 | 19 Q 0069 |
| 01 R 0446 | 28 R 0628 |
| 18 R 0672 | 34 R 0946 |
| 15 R 0474 | 13 S 0854 |
| 30 S 0744 | 24 S 0749 |
| 18 S 0302 | 29 T 0572 |
| 16 U 0886 | 12 V 0846 |
| 29 V 0976 | 35 V 0194 |
| 35 V 0727 | 20 V 0656 |
| 36 W 0364 | 05 W 0270 |
| 40 W 0378 | 28 W 0131 |
| 36 W 0557 | 33 W 0778 |
| 02 W 0655 | 17 X 0375 |
| 23 X 0630 | 38 X 0523 |
| 33 Y 0368 | 15 Y 0678 |
| 24 Y 0438 | 10 Y 0078 |
| 44 Y 0092 | 15 Z 0134 |
| 30 Z 0717 | 28 Z 0883 |
| 28 Z 0074 | 15 G 0761 |

(இவை உறுதிப்படுத்தப்படவேண்டும்.)

டிய அவசியத்தைச் சபைக்குச்சுட்டிக்காட்டவே திரும்பவும் சபை இதைப் பரிசிலனை செய்தது. 1965-ம் ஆண்டு ஆவணி மாசத்தில் சபையின் நிதிக்குழு, சிபார்சு செய்ததின் பேரில் மார்கழி மாதம் நடந்த சபைக் கூட்டத்தில் வீடு வளவுகளினது சோலைவரியைத் திரும்பவும் மதிப்பீடு செய்வதென்றும் 67-ம் ஆண்டிலிருந்து அமுலாக்கவேண்டுமென்றும் அதற்குரிய நடவடிக்கைகளை எடுக்கவேண்டுமென்றும் மாலாம் பூர்த்தியாகிவிட்டதன் காரணத்திஞல் சபை ஏற்கனவே எடுத்துக் கொண்ட தீர்மானத்தின் அடிப்படையில் புதிய மதிப்பீட்டின் பிரகாரம் வரக்கூடிய தொகையை சபையின் வருமானமாகக் கணித்து வரவுசெலவுத் திட்டத்தைத் தயாரித்துள்ளார். செலவுகளுக்குரிய பலத்தையும் இந்த அடிப்படையில் தான் ஒதுக்கீடு செய்திருக்கின்ருர்.

யங்கள் மற்றுமுள்ள பெரிய நிலையங்கள், தொழில்ஸ்தாபனங்கள், பெரிய வீடுகள் இவைபோன்றவை உரிமையுள்ளவர்களுக்கு கட்ட வேண்டியகந்தாயப்பணம் 5 ரூபாய் தொடக்கம் 10 ரூபாய்வரைக்கும் அதிகரிக்கக்கூடியதாயிருக்கும். வரி உயர்வு சம்பந்தமாக தெரிவிக்கும் ஆட்சேபனைகளை நன்ருக பரிசீலனை செய்வதற்காக அங்கத்தவர்களின் உபகுழு ஒன்றையும் நியமிக்கவிருக்கின்றேன்.

# மாநகரசபை வரி உயர்வுக்கு ஆர்ப்பாட்ட ஊர்வலம்

நல்லூர், வெள்ளி

அரசாங்க விலைமதிப்பினருக்கு செலுத்தவேண்டிய மிகுதிப் பணம் பற்றி ஆலோசனை செய்ய இன்று மாலை மாநகரசபை கூடுகிறது அதேவேளையில் நகரசபை மண்டபத்தில் வெளியில் ஆர்ப்பாட்ட ஊர்வலம் ஒன்றையும் நடத்தி வரி உயர்வுக்கு எதிர்ப்புத் தெரிவிக்க சிலர் முடிவுசெய்துள்ளதாகவும் கூறப்படுகிறது.

69 ம் ஆண்டுக்குரிய வரி பற்றிய பத்திரம், வரியிறுப்பாளருக்கு அனுப்பப்பட்டுள்ளது. வரி 40 சத வீதம் கூட்டப்பட்டிருப்பதாக அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. வரியிறுப்பாளர் தங்கள் வட்டார அங்கத்தவர்களையும் சந்தித்து இதற்கு ஆட்சேபம் தெரிவித்துள்ளார்கள்.

## அங்கத்தவர்கள் முழுமூச்சாக எதிர்ப்பு

சில வளவுகளிலும் வீடுகளிலும் எவ்வித திருத்தமும் செய்யப்படாமலே, வரியை கூட்டியிருப்பதாக வரியிறுப்பாளர் ஒருவர் தெரிவித்தார்,

திருவாளர்கள் கே. வி. தெய்வேந்திரன், ஏ. ரி. துரையப்பா, ஏ. விஸ்வநாதன், தம்பு கந்தையா, ஜனுப் காதர் ஆகியோர் வரி உயர்வை முழுமூச்சாக எதிர்க்கப்போவதாகத் தெரிவித்தனர். வரிஉயர்வை எதிர்த்து வட்டாரங்கள் தோறும் ஆட்சேபக்கூட்டங்கள் நடத்தவும் ஒழுங்குசெய்யப்பட்டு வருகிறது.

1969-ம் ஆண்டிற்குரிய வரி கூட்டப்பட்டதை எதிர்த்து எழுத்துமூலம் வரியிறுப்பாளர், ஆட்சேபத்தை தெரிவிக்கும்படி திரு. ஏ. ரி. துரையப்பா வரியிறுப்பாளர்களுக்கு ஒரு வேண்டுகோள் விடுத்துள்ளார்.

யாழ்ப்பாணம் வரியிறுப்பாளர் சங்கத் தலைவரும் மாநகரசபை உறுப்பினருமான திரு தா. ச. துரைராஜா நேற்று இது சம்பந்தமாக வெளியிட்டுள்ள அறிக்கையில் கீழ்க்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

1966-ம் ஆண்டின் முற்பகுதியில் அப்போது மேயராக இருந்த திரு. ஏ. ரி. துரையப்பா வீடு வளவுகளைத் திரும்ப வரிமதிப்புச் செய்யுமாறும் இவ் வேலைக்கு சலாரை செலுத்துவதாகவும் அரசாங்க விலைமதிப்பு பகுதியினருக்கு அடுத்த வேண்டுகோளையும் செய்யப்பட்ட உடன்பாட்டையும் இப்போது கௌரவிப்பதா அல்லது விட்டுவிடுவதா என்பது தான் இப்போது நகரசபையின்முன்னுள்ள பிரச்னையாகும் திரு துரையப்பரின் வேண்டுகோளின்பிரகாரம் அரசாங்க விலைமதிப்புப் பகுதியினர் வீடு வளவுகளின் விலைமதிப்பை நிர்ணயித்துள்ளார்கள்.

## சலவைக்கூலி வழக்கு தீர்ப்பு

முல்லைத்தீவு வியாழன்

முல்லைத்தீவைச் சேர்ந்த வெள்ளா முள்ளி வாய்க்கால் என்னுமிடத்தைச் சேர்ந்த ஆசிரியர் ஒருவர் வற்றாப்பளையைச் சேர்ந்த சலவைத் தொழிலாளியான வேலன் காத்தி என்பவருக்கு சலவைக்கூலி கொடுக்கவில்லையெனத் தொடரப்பட்ட வழக்கு முல்லைத்தீவு நீதிபதி திரு ஆர். நவரத்தினம் முன் விசாரணைக்கு எடுக்கப்பட்ட போது ரூபா 35 கொடுக்குமாறு தீர்ப்பளிக்கப்பட்டது. ஆசிரியருக்கு புத்திமதிகூறிய நீதிபதி ஊத்தை உடுப்புகளை சலவை செய்பவனின் பணத்தைக் கொடுக்காது விடுவது மரியாதையல்ல என்றும் ரூபா 35 கொடுக்குமாறும் தெரிவித்தார்.

## அண்ணா மறுமலர்ச்சி இயக்கம்

யாழ்ப்பாணம், வெள்ளி

அண்ணா மறுமலர்ச்சி இயக்கம் ஒன்று வண்ணார் பண்ணை காரைக்காட்டு இளைஞர்களால் உருவாக்கப்பட்டுள்ளது. பின்வருவோர் நடப்புவருட உத்தியோகத்தராகத் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர்: எஸ். கே. சண்முகநாதன், செயலாளர்: செல்வி கிளியம்மா கணபதிப்பிள்ளை, பொருளாளர்: சொ. இரத்தினம். நாலு பேர் கொண்ட நிர்வாக சபையும் தெரிவு செய்யப்பட்டது. (ந. நி.)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வரிவிளம்பரம்


### தேவை

காங்கேசன்துறை மயிலிட்டி கூட்டுறவுத் தொழிலாளர் சங்கத்திற்கு ஒரு மனேச்சர் தேவை. விரும்புவோர் 15-3-69-க்கு முன் விண்ணப்பிக்கவும். சம்பளம் எல்லாம் உட்பட 120 ரூபா. தொடக்கம்: பிணை காசு 1000 ரூபா. தராதரம் கூட்டுறவுக் கலாசாலையில் சித்தி பெற்றவராய் இருத்தல்வேண்டும். காரியதரிசி மா. அருளானந்தம், தையிட்டி, மண்ணிகுப்பை, காங்கேசன்துறை. 733

குறைந்த பட்சம் மூன்று வருட அனுபவமுள்ள சாதுவான குணமுள்ள ட்றைவர் சக பியோன் தேவை. யாழ்ப்பாண மாநகரசபை எல்லைக்குள் வசிப்பவர் விரும்பத்தக்கது. சமீபத்தில் பெற்ற இரண்டு நற்சாட்சிப் பத்திரங்களுடன் தேவையான சம்பளத்தையும் குறிப்பிட்டு விண்ணப்பிக்கவும். விளம்பர இல. 728, C/o 'ஈழநாடு'. யாழ்ப்பாணம். 728

### விற்பனைக்கு

ஸ்ரீகாந்தா அச்சக வெளியீடு: 7-ம் வகுப்பு முதலாம் பருவ வழிகாட்டிக்கு அமைந்த மாதிரி வினுப்பத்திரம் கணிதபாடத்திற்கு வெளிவந்துவிட்டது. விலை 95 சதம். ஸ்ரீகாந்தா அச்சகம்-புத்தகசாலை, யாழ்ப்பாணம். 736

பாஷன் பேணிஷிங் பலஸ் ஸ்தாபனத்தாருக்குச் சொந்தமான ''கராஜ்'' சகல உபகரணங்களுடன் விற்பனைக்குண்டு. விபரத்திற்கு 5 7 ஸ்ரான்லி ரோட், யாழ்ப்பாணம் என்ற விலாசத்துடன் தொடர்பு கொள்ளவும். 729

பரியாரி கமம் 6 ஏக்கர் எல்லை கிழக்கு வேலுப்பிள்ளை-சிதம்பரப்பிள்ளையின் ஆதனம் தெற்கு ரோட்டு மேற்கும் வடக்கும் குளம் மாந்தை தெற்கு மாந்தை டிவிஷன், மன்னார் டிஸ்திறிக், வடமாகாணம். நல்ல விளைச்சலான காணி உடன் விற்க விரும்புகிறேன். நேரே தொடர்பு கொள்ளவும். S. S. பொன்னையா, வட்டுக்கிழக்கு, வட்டுக்கோட்டை. 735

### நன்றிநவிலல்

காலஞ்சென்ற திரு. வி. அருணசலத்தின் மரணச் சடங்கில் கலந்துகொண்டவர்களுக்கும், அனுதாபச்செய்திகளை அனுப்பியவர்களுக்கும், உதவிகளைச் செய்தவர்களுக்கும் எங்கள் மனமார்ந்த நன்றியைத் தெரிவிக்கின்றோம். அ. திருநாவுக்கரசு



### கிராமச்சபைகள் கட்டளைச் சட்டம் 17ம் பிரிவின்படியான அறிவித்தல்.

1961இன் 60ஆம் இலக்க அதிகார சட்டத்தால் திருத்தப்பட்டபடியான கிராமச்சபைகள் கட்டளைச் சட்டத்தின் (அத்தியாயம் 257 17(5)ஆம் பிரிவால் எனக்கு உரித்தாக்கப்பட்ட அதிகாரபலத்தைக்கொண்டு உள்ளூராட்சி உதவி ஆணையாளர், யாழ்ப்பாணம், அன்ரனி அல்பிறற் ஜோசப் ஆகிய நான் இதன் அட்டவணையின் பத்தி Iல் குறிக்கப்பட்டுள்ள கிராமச்சபையின் கூட்டத்தை அந்த அட்டவணையின் பத்தி IIல் உள்ள ஏற்ற பதிவில் குறிக்கப்பட்டுள்ள திகதியில் அந்த அட்டவணையின் பத்தி IIIல் உள்ள ஏற்ற பதிவில் குறிக்கப்பட்டுள்ள நரத்தில் அந்த அட்டவணையின் பத்திIVல் குறிக்கப்பட்டுள்ள இடத்தில் இத்தால் கூட்டுகின்றேன்.

அ. அ. ஜோசப்,
உள்ளூராட்சி உதவி ஆணையாளர்,
யாழ்ப்பாணம்.

உள்ளூராட்சி அமைச்சு,
யாழ்ப்பாண அலுவலகம்,
யாழ்ப்பாணம், 1968ம் வரு மாசி மா. 26ந் திகதி.

| பத்தி I<br>கிராமச்சபையின் பெயர் | பத்தி II<br>திகதி | பத்தி III<br>நேரம் | பத்தி IV<br>இடம் |
|---|---|---|---|
| வேலணை | 15-3-69 | 10.00 மு.ப. | கிராமச்சபை அலுவலகம், வேலணை. |

G B 2075

### மாணவர்தேர்ச்சிஅறிக்கை

3 தவணைக்கும்
புல்ஸ்காப் தாளில் 100- ரூ.8-00
லெட்ஜர் ,, 100- ரூ 10-00
பிறிஸ்டல்போட்டில் 100- ரூ.13-00
V. P. P. மூலம் அனுப்பப்படும். பாடசாலை விலாசத்துடன் ஆடர் விபரம் குறிப்பிட்டனுப்பவும்.
கலாபவன அச்சகம்
வியாபாரிமூலை - பருத்தித்துறை.

### அடைவு நகைகள் ஏலவிற்பனவு விளம்பரம்

தொல்புரம் இ. துரையப்பா & சன்ஸ் அடைவு கடையில் 15-8-1966 தொடக்கம் 31-10-67 வரை அடைவு வைத்து மீட்கப்படாத நகைகளை 29-3-60 சனிக்கிழமை மு. ப. 8-0. மணி முதல் மேற்படி கடையில் வைத்து பகிரங்க ஏலத்தில் என்னால் விற்கப்படும்.

சி. செ. மாரிமுத்து,
Commissioner,
Auctioneer'

விதான வளவு,
சித்தன்கேணி,
28-2-69. 1208

### யாழ். மாநகரசபை அறிவித்தல்

**மாநகரசபை அதிகார எல்லைக்குள் கட்டாக்காலி ஆடு, மாடுகள் பிடிப்போர் பதவிக்கான காலி ஸ்தானங்கள்**

மேற்படி பதவிக்கான விண்ணப்பங்கள் 21 வயது முதல் 45 வயது வரையுள்ள திடசாலியும், சுகதேகியுமான ஆண்களிடமிருந்து 1969-ம் ஆண்டு பங்குனி மாதம் 19-ம் திகதி நண்பகல் 12-00 மணி வரை என்னால் ஏற்றுக்கொள்ளப்படும்,

மேல் விபரம்காரியாலய நேரத்தில், மாநகர சபை மராமத்துப் பொறியியலாளரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம்:

ஏ. ரி. சுந்தரம்,
மாநகர ஆணையாளர்.

மாநரசபை,
யாழ்ப்பாணம்,
5-3-1969. 1213


## இன்றைய பலன்

கிரிக்கெட்

## பத்து விக்கெட்டுகளால் சென். ஜோன்ஸ் வெற்றி

யாழ்ப்பாணம், வெள்ளி

சென். ஜோன்ஸ் கல்லூரிக்கும், வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரிக்குமிடையில் சென். ஜோன்ஸ் கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற கிரிக்கெட் போட்டியில் சென். ஜோன்ஸ் வெற்றி பெற்றது.

முதலில் துடுப்பெடுத்தாடிய வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி சகல விக்கெட்டுகளையும் இழந்து மொத்தம் 117 ஓட்டங்களைப் பெற்றது இக் கல்லூரி இரண்டாவது இன்னிங்ஸில் கூடுதலான ஓட்டங்களை எடுக்கக் கூடுமென ரசிகர்கள் எதிர்பார்த்த போதும். சென். ஜோன்ஸ் கோஷ்டியின் அபார பந்துவீச்சினால் ஆக 111 ஓட்டங்களையே எடுத்தது.

சென். ஜோன்ஸ் கல்லூரி 1-வது இன்னிங்ஸில் 9 விக்கெட் நஷ்டத்துக்கு 212 ஓட்டங்களை எடுத்தது.

மில்ஸ், சுரேந்திரா, தெய்வேந்திரா ஆகியோர் மிகவும் திறமையாக துடுப்பெடுத்தாடினர். இக் கல்லூரி இரண்டாவது [illegible] விக்கெட் நஷ்டமின்றி 20 ஓட்டங்களை எடுத்து, யாழ்ப்பாணக் கல்லூரியை 10 [illegible]

## வெற்றி தோல்வி இல்லை

ஊர்காவற்றுறை, வியாழன்

ஊர்காவற்றுறை ஐக்கிய விளையாட்டுக் கழகத்திற்கும் காரைநகர் விளையாட்டுக் கழகத்திற்குமிடையே நடைபெற்ற உதைபந்தாட்டத்தில் இரு கோஷ்டிகளும் தலா இரண்டு கோல் போட்டதால் [illegible]

# 'பற்குணதேவிக்கு என்னவிருப்பம் என்று கேட்கும்படி எதிரி சொன்னர்

# எதிரிவந்தது அம்மாவுக்கு கோபத்தைக் கொடுத்தது"

## புனிதவதி கொலை வழக்கில் கொலையுண்டவரின் மகள் சாட்சியம்

யாழ்ப்பாணம், வெள்ளி

''எதிரி ஒரே நாளில் இரண்டுதடவை வந்து அம்மாவுடன் கதைத்தார். ''பற்குணதேவிக்கு என்ன விருப்பம்'' என்று கேட்டுச்சொல்லும்படி எதிரி அம்மாவிடம் சொன்னர். விருப்பமொன்றுமில்லை சொந்தக்காரரின் தொல்லையிருக்கிறதுஎன்று அம்மா சொன்னர் எதிரி வந்தது அம்மாவுக்கு கோபமாக இருந்தது. சம்பவம் நடந்ததினத்திற்கு முதல் நாள் எதிரியை பக்கத்து வீட்டில் கண்டேன். சம்பவம் நடந்த இரவு ஓர் உருவத்தைக் கண்டேன். அந்த உருவத்தின் பின்பக்கம் எதிரின் சாயலாக இருந்தது.

புனிதவதிகொலைவழக்கில் கொலையுண்டவரின் மகள் சிவஞானத்திரு சாட்சியமளிக்கையில் மேற்கண்டவாறு கூறினர். இவ்வழக்கு நேற்றுக்காலை இரண்டாவது தினமாக வடபகுதி அசைஸ் கோர்ட்டில் நீதியரசர் வி. ரி. பண்டித குணவர்த்தன முன்னிலையில் விசாரணை செய்யப்பட்டது.

இவ்வழக்கில் தொல்புரத்தில் 67ம் ஆண்டு அக்டோபர் 4ம் தேதி புனிதவதியைக் கொலை செய்ததாக அருணசலம் கிருஷ்ணபிள்ளை என்பவர் மீது குற்றம் சாட்டப்பட்டிருந்தது.

எதிரிசார்பில் அட்வகேட் ஏ.எச்.டி. சில்வா அட்வகேட் கே. சிவானந்தனின் உதவியுடனும், புறக்டர் சி. பரமசிவம்பிள்ளையின் அனுசரணையுடனும் ஆஜரானர். எதிரிக்காக அரசாங்கத்தால் அட்வகேட் எம். சிவராஜசிங்கம் நியமிக்கப்பட்டிருந்தார். முடிக்குரிய தரப்பில் அட்வகேட் ரஞ்சித் குணதிலகா ஆஜரானர்.

விசாரணையைப் பார்ப்பதற்கு கோட்டின் உள்ளேயும் வெளியேயும் ஏராளமானோர் திரண்டிருந்தனர்.

சிவஞானத்திரு (வயது23) சாட்சியமளிக்கையில் கூறியதாவது:-

சம்பவம் நடந்ததினம் எங்கள் வீட்டில் நானும் அம்மாவும் பற்குணதேவியும் இருந்தோம். தையல் பாடசாலையில் பற்குணதேவியும் சிநேகிதமானேம். பற்குணதேவியை அவர் தாயார்எங்கள்வீட்டில் இருக்கவிட்டார். சம்பவம் நடப்பதற்கு சில நாட்களுக்கு முன் மயில்வாகனம் எங்கள் வீட்டிற்கு வந்தார். இரண்டாம்தடவை அவருடன் மாயவனும்(எதிரி வந்தார். இன்று மாயவனுக்கு கிருஷ்ணபிள்ளை என்று பெயர் எனத் தெரியும். எதிரி அம்மாவுடன் கதைத்தார். பற்குணதேவி பற்றித்தான் கதைத்தார். இந்தப்பிள்ளை எதற்காகஇங்கே வந்திருக்கிறது. என்னவிருப்பம் என்று கேட்டுச் சொல்லுங்கோ அம்மா என்று எதிரி சொன்னர் சொந்தக்காரரின் தொல்லையால் வந்திருக்கு என அம்மா சொன்னர். எதிரி மீண்டும் வந்து அம்மாவுடன் கதைத்தார். எனக்குக் கேட்கவில்லை. பற்குணதேவிபற்றி எதிரி தன்னுடன் கதைத்ததாக அம்மா சொன்னர்

### சாரத்தைக் கண்டதும் அழுதார்

சம்பவம் நடந்த இரவு 6மணிபோல் எல்லாரும் சாப்பிட்டோம் அதன் பின் அம்மாவுடன் கதைத்துக் கொண்டிருந்தோம். அம்மா கட்டிலிலிருந்தார். நாங்கள் விருந்தையில் இருந்தோம். எமது வீட்டில் இரண்டு அறைகள் உண்டு ஓர் அறையில் நானும் பற்குணதேவியும் படுப்போம். மற்ற அறையில்சாமான்கள் வைத்திருந்தோம். அம்மா விருந்தையிலுள்ள கட்டிலில் படுப்பார். எங்கள் வளவிற்கு நாலுபக்கமும் வேலி. மூன்றுபக்கம் பனை ஓலைவேலி. முன்பக்கம் தியால்போடப்பட்டவேலி படலையை இரவில் பூட்டுவோம். சம்பவம் நடந்த தினம் படுக்கப்போகுமுன் அம்மாவிற்குச்சாரம் கொடு

### படிக்கு அருகில் உருவம் நின்றது

அன்றிரவு எல்லாரும் படுத்தவுடன் செம்பு சத்தம் முதலில் கேட்டது. என்ன சத்தம் என்று பார்க்கும்படி பற்குணதேவியிடம் சொன்னேன். பற்குணதேவி பார்த்துவிட்டு வந்த பின் படுத்தோம் இரண்டாம் தடவையும் சத்தம் கேட்டது. பற்குணதேவியின் கை என்மீது பட்டதும் இருவரும் எழுந்தோம் பற்குணதேவி கதவைத் திறந்தார். நான் வெளியில் வந்து அம்மா கிடந்த கட்டிலைப் பார்த்தேன். அம்மாவைக் கட்டிலில் காணவில்லை. அம்மா அம்மா என்றபடி படியில் இறங்கினேன். படிக்கு அருகில் ஒரு உருவத்தைக்கண்டேன் அது ஒரு ஆணின் உருவம் நான் படியில் ஒருகால் வைத்து யார் என்று கேட்ட அந்த உருவம் ஓடியது. அப்பொழுது கள்ளன் கள்ளன் என்று பின்னால் ஓடினேன். அந்த உருவத்தின் பின்பக்கம் எதிரியின் சாயலாக இருந்தது. கழுத்திலிருந்து முழங்கால் வரை வெள்ளையாக இருந்தது. கைகள் தெரிந்தது. உருவத்தைப் பிடிக்கத்தான் ஓடினேன். அந்த உருவம் படலையை இழுத்துப் பார்த்துவிட்டு படலையால் எறிக்குதித்தது. பற்குணதேவிக்கும் பொலிசுக்கும் அந்தஉருவத்தைப்பற்றிச் சொன்னேன். பற்குணதேவி லைட் கொண்டுபோய் பார்த்து அம்மா இரத்தக் கோலத்துடன் கிடப்பதாக சொன்ன அம்மா எங்கே என்றுநான் கேட்டபோதே அவர் அப்படிச் சொன்னர். கதவுப்பக்கம்கால் விருந்தைப்பக்கம் தலை இருந்தது. அம்மாஅம்மாவென்று கூப்பிட்டேன். பதில் ஒன்றுமில்லை. பயமாக இருந்தது.(கோர்ட்டில்விக்கி விக்கிஅழுதார்.) அதன்பின் ஆட்கள் வந்தார்கள். அம்மாவின் நாடியை ஆட்டிப்பார்சார் அன்று இரவு வந்தார்கள்.

எதிரியின் வழக்கறிஞர் சில்வாசாட்சியமளித்த சிவஞானதிருவை குறுக்கு விசாரணை செய்தார்.

வழ: ஒருநாள், மயில்வாகனம் எதிரியுடன் வந்தார்?- ஆம்.

வழ: மயில்வாகனம் பற்குண தேவியுடன் கதைத்தாரா?-ஆம்.

வழ: கட்டிலிலிருந்து கொண்டு மயில்வாகனம்பற்குண தேவியுடன் கதைத்தார்? -ஆம்.

வழ: அப்பொழுது அம்மா எங்கே? குசினியில்

வழ: அம்மாவுடன் மயில்வாகனம் ஒன்றும் கதைக்கவில்லை? அம்மா பார்க்க விடமாட்டேன்என்ரு. அண்ணன் என்று சொன்னபின் தான் விட்டா.

வழ: மயில்வாகனம் தெரியாத ஆளைக் கூட்டி வருவது அம்மாவிற்குப் பிடிக்கவில்லை? ஆம்.

வழ: மயில்வாகனத்திடம் அதனை சொல்லவில்லையா? பெண்பிள்ளைகள் இருக்கும் வீட்டில் எதற்காக மற்றவரை கூட்டிவந்ததென்று அம்மா கேட்டா. அண்ணன் என்றுவிட இன்னுமொருவரைக் கூட்டி வந்துவிட்டாயா என்று அம்மா பேசினர்.

வழ: எதிரியுடன் அம்மா கதைத்தாரா? சொந்தக்காரன் கரைச்சலினல் தான் பற்குணதேவியை தாயார் இங்கு கொண்டு வந்திருப்பதாக எதிரியிடம் அம்மா சொன்னர்.

வழ: சம்பவம் நடப்பதற்கு முதல்நாள் எதிரியை பக்கத்து வீட்டில் கண்டதாக கூறினீர்? ஆம்

வழ: அது நடராசா வீடு? ஆம்

வழ: நடராசா சொந்தக்காரர்? ஆம்

வழ: உமது தாயார் மதுபானம் அருந்துகிறவாரா? சுகமில்லாத நேரம் குடிப்பார்.

வழ: சுகமாக இருக்கும் போதும் குடிப்பார்? இல்லை சுகமில்லாவிட்டால் தான் குடிப்பார்,

வழ: பெண்கள் குடிப்பதை உங்கள் பகுதிமக்கள் விரும்புவதில்லை? ஆம்

வழ: குடிப்பதால்பெண்களின் குணம் கெட்டுவிடுமென கருதுவார்கள்? ஆம்

வழ: சம்பவதினம் தாயாருக்கு சுகமில்லையா? அன்று முழுகினவர்.

வழ: 'முழுகிற நாட்களில் குடிப்பது வழக்கமா? ஆம்

(4-ம் பக்கம் பார்க்க)


அன்பு வெளியீடு
வெளிவந்துவிட்டது!
**ஆருந்தரப் புவியியல்**
க. குணராஜா பி. ஏ. (Hons)
0 அரசாங்க திணைக்கள பாடத்திட்டத்தினையடக்கி ஆக்கியது.
0 படப் பயிற்சியும் இணைந்தது.
0 115 விளக்கப் படங்கள் கொண்டது.
விலை ரூபா 3-90. வி. பி. பி. கவனிக்கப்படும்.
விற்பனையாளர்
அன்பு புத்தகசாலை, 27 D, பெரியகடை, யாழ்ப்பாணம்.
ஸ்ரீ லங்கா புத்தகசாலை, 234, கே கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம்.

**REGAL** Jaffna


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

காலஞ்சென்ற திரு. வி. அருணாசலத்தின் மரண சடங்கில் கலந்துகொண்டவர்களுக்கும், அனுதாபச்செய்திகளை அனுப்பியவர்களுக்கும், உதவிகளைச் செய்தவர்களுக்கும் எங்கள் மனமார்ந்த நன்றியைத் தெரிவிக்கின்றோம். அ. திருநாவுக்கரசுவும் குடும்பமும், மண்டைதீவு. 734

**EDUCATION**

A Chemistry Class for G. C. E. (A. L) is being Conducted by a well Known Staff. Contact Registrar College of Education, opposite old bus stand, Jaffna. 732

## தற்கொலை

சாவகச்சேரி, வியாழன் எதிரிகள் ஏசியதால் அவமானமடைந்த நான்கு பிள்ளைகளின் தந்தை ஒருவர் கழுத்தில் சுருக்கிட்டுத் தற்கொலைசெய்து கொண்டார்.

மறவன்புலவை அடுத்துள்ள கைதடி-நாவற்குழி என்ற இடத்தைச் சேர்ந்த நா. பொன்னையாசாமி என்னும் 52 வயதானவரே இவ்விதம் தற்கொலைசெய்து கொண்டவராவார். விசாரணைசெய்த திடீர் மரண விசாரணை அதிகாரி தற்கொலையெனத் தீர்ப்பளித்தார்.

## இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்

வெள்ளி 7—3—69

(செய்திகள் காலை 7-00, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00.)

344 மீ. அன் 61 மீ.

காலை 6-30 நாதாஞ்சலி, 6-35 சைவ நற்சிந்தனை, 6-40 இஸ்லாமிய நற்சிந்தனை, 6-45 துதிப்பாடல்கள், 7-30 பண்ணிசைந்தமிழ், 8-00 குரான், 8-15 இஸ்லாமிய கீதங்கள்

344 மீ. அன் 49 மீ.

பகல் 12 00 சித்திரகானம், 1-00 மாதர்கேட்டவை.

344 மீ. அன் 61 மீ.

மாலை 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-30 கானமஞ்சரி.

இரவு 6-15 பஜனை, 6-45 பாவளம், 7-00 கிராமசஞ்சிகை, 7-30 விவாதமேடை, 8-00 முஸ்லிம் நிகழ்ச்சி, 9-30 இசைக்கச்சேரி — ராம் குமாரசாமி.

## இன்றைய பலன்

வெள்ளிக்கிழமை

(7-3-69)

மாசி மாதம், 24 உ

திதி- திருதியை பகல் 9-47 மேல் சதுர்த்தி.

நட்சத்திரம்- சித்திரை இரவு 10-56 மேல் சுவாதி.

ராகுகாலம்- 10-55 12-25.

சுபநேரம்- 6-25 7-55.

இன்று பிறந்தவர்களுக்கு இவ்வாண்டு நல்லாண்டாகும். மணம் முடிப்போர்க்கு மகிழ்ச்சிக்குரிய ஆண்டு. இனப்பகை நீங்கும் இனிமை உண்டு. பொதுநலச் சேவைகள் தரும் ஆண்டு. விவசாயிகளுக்கு மந்த நிலை காணும். வெளியூர் பிரயாணம் வெற்றிதரும் ஆண்டாகும்.

மேஷம்- கனிவான நினைவு காதல் தொடர்பு.

ரிஷபம்- நிர்ப்பந்த நிலை, நிதானம்வேண்டும்.

மிதுனம்- பெற்றோர் உதவி பெருமையுப் சேரும்.

கடகம்- நலன்தரும் நடவடிக்கை, நல்ல முன்னேற்றம்.

சிம்மம்- கலகலக்கும் பணம், சலசலக்கும் வாழ்வு.

கன்னி- கடன் பட நேரிடும், மதிப்பில் மந்தம்.

துலாம்- குசுகுசு பேச்சு குமைச்சல் அதிகம்.

விருச்சிகம்- இன்புற்று வாழ்வீர், இறைஅருள் உண்டு.

தனுசு- அமைதிக்கு பங்கம், ஆசாரக் குறைவு.

மகரம்- முயற்சியால் உயர்ச்சி தனமும் சேரும்.

கும்பம்- மக்கள் நலன், மகிழ்ச்சிப்பெருக்கு.

மீனம்- போற்றவரும் கூட்டம் தூற்றவும் செய்யும்.

—சோதிடக்கலாநிதி—

திருமலை வேலுப்பிள்ளை

ஊர்காவற்றுறை, வியாழன்

ஊர்காவற்றுறை ஐக்கிய விளையாட்டுக் கழகத்திற்கும் காரைநகர் விளையாட்டுக் கழகத்திற்குமிடையே நடைபெற்ற உதைபந்தாட்டத்தில் இரு கோஷ்டிகளும் தலா இரண்டு கோல் போட்டதால் ஆட்டம் வெற்றி தோல்வியின்றி முடிவடைந்தது.

கரம்பன் விளையாட்டுக் கழகத்திற்கும் புங்குடுதிவு விளையாட்டுக்கழகத்திற்குமிடையே நடைபெற்ற உதைபந்தாட்டத்தில் இருதரப்பினரும் தலா ஒரு கோல் போட்டனர். ஆட்டம் வெற்றி தோல்வியின்றி முடிவடைந்தது.

## விவசாயிகள் கஷ்டம் பற்றி எம். பி.

மல்லாவி, வியாழன்

"இவ்வருடம் பருவ மழையின்மையால் இப்பகுதி மக்களுக்கு ஏற்பட்ட நஷ்டம் ஏழை விவசாய மக்களால் தாங்கக் கூடியதாக இல்லை. இதை நான் பலதடவை அரசாங்கத்திற்கு தெரியப்படுத்தியுள்ளேன். மேலும் என்னால் ஆகவேண்டிய உதவிகளைச்செய்து 1968-69 விவசாயக்கடனைத் திருப்பிக்கட்ட முடியாதமக்களின் கூப்பன்களை அரசாங்கம் பறியாதிருக்கவும் இக்கடனை மக்களிடமிருந்து அரசாங்கம் அறவிடாதிருக்கவும், இவ்வருட நிலவரி நீர்வரி முதலியனவற்றை அரசாங்கம் கழித்துவிடவும் வவனிக்குள மக்களுக்கு இலவச விதை நெல் வழங்கவும் இவ்விடைக் காலத்திற்கு மக்களுக்குச் சகாயவேலை முதலிய வசதிகளைச்செய்து தரவும் நான் தயாராக உள்ளேன்."

இவ்வாறு வவனிக்குளம் இணைப்புக்குழுக் கூட்டத்தில் யோகபுரம் பாரதி கிராம முன்னேற்றச்சங்க காரியதரிசி திரு. கு. சிவஞானசண்முகத்தால் இப்பகுதி மக்களின் இவ்வருட விவசாயக் கடனைப்பதிவழிக்குமாறு கொண்டு வந்த பிரேரணைக்குப்பதிலளித்துப்பேசிய கிளிநொச்சி எம். பி. பண்டிதர் கா. பொ. இரத்தினம் கூறினார். இக்கூட்டத்திற்கு யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் திரு. பீட்டர்ஸ் தலைமை தாங்கினார்.

மன்னார் எம். பி. யும் யாழ்ப்பாண மன்னார் அரசாங்க அதிபர்களும் இது விஷயத்தில் ஒத்துழைப்பார்களெனத் தாம் நம்புவதாகவும் பண்டிதர் இரத்தினம் தெரிவித்தார்.

ஓட்டங்களை எடுத்தது.

மில்ஸ், சுரேந்திரா, தெய்வேந்திரா ஆகியோர்மிகவும் திறமையாக துடுப்பெடுத்தாடினர். இக் கல்லூரி இரண்டாவது இன்னிங்ஸில் விக்கெட் நஷ்டமின்றி 20 ஓட்டங்களை எடுத்து, யாழ்ப்பாணக் கல்லூரியை 10 விக்கெட்டுகளால் தோற்கடித்தது.

இப்போட்டிக்கு திருவாளர்கள் ராமநாதன், சுரேந்திரநாத் ஆகியோர் மத்தியஸ்தர்களாகக் கடமையாற்றினர். (தே. நி

கள் வளவிற்கு நாலுபக்கமும் வேலி. மூன்றுபக்கம் பனை ஓலைவேலி. முன்பக்கம் தியால்போடப்பட்டவேலி படலையை இரவில் பூட்டுவோம். சம்பவம் நடந்த தினம் படுக்கப்போகுமுன் அம்மாவிற்குச்சாரம் கொடுத்தேன்.

கோர்ட்டில் சாரத்தை அடையாளம் காட்டிய போதுகண்ணீர் விட்டுஅழுதபடி சாட்சியமளித்தார்.

செம்பு வழக்கமாக கொடுப்பேன் அன்று கொடுக்கவில்லை.

கம்கால் விருந்தைப்பக்கம் தலை இருந்தது. அம்மாஅம்மாவென்று கூப்பிட்டேன். பதில் ஒன்றுமில்லை. பயமாக இருந்தது. (கோர்ட்டில்விக்கிவிக்கிஅழுதார்.) அதன்பின் ஆட்கள் வந்தார்கள். அம்மாவின் நாடியை ஆட்டிப்பார்த்தேன். பேச்சுமூச்சில்லை. அதன்பின் நான் மயக்கமடைந்துவிட்டேன். பொலி


ராணி


(யாழ்ப்பாணம்)

தினசரி 3 காட்சிகள்.

சிவாஜி கணேசன் மாலினி நடித்த

**சபாஷ் மீனா**

கிங்ஸ்லி



பிளாஸா

வெம்பிளி (கண்டி)

ஸ்ரீகிருஷ்ணா (திருமலை)

வெலிங்டன் (யாழ்ப்பாணம்)

மற்றும் சினிமாஸ்திரைகளில்

சிவாஜி கணேசன்


கே. ஆர். விஜயா

முத்துராமன்,

எல். விஜயலக்ஷ்மி,

நாகேஷ், குமாரிசச்சு

இன்னும் பலர் நடித்த ஸ்ரீதரின் மகோன்னத ஈஸ்ட்மென் கலர்ப் படைப்பு



**ஊட்டிவரை உறவு**

இசை: விஸ்வநாதன் பாடல்கள்: கவிஞர் கண்ணதாசன்

அத்துடன் காண்பிக்கப்படுகிறது யாழ் வெலிங்டன் திரையில்

மு. கருணாநிதியின் விமர்சனத்துடன்

S S. வாசன் அவர்களால்

ஈஸ்மன்கலரில்படமாக்கப்பட்டு சென்னையில் நடைபெற்ற

இரண்டாவது அனைத்துலக தமிழ் ஆராய்ச்சிமகாநாட்டு கோலாகல காட்சியையும்



மற்றும்

மக்கள் திலகம் எம். ஜி. ஆர். - அறிஞர் அண்ணா ஆகியோர் இம்மகாநாட்டில் சொற்பொழிவாற்றுவதையும் பார்க்கலாம்!



53வது தினம்!

ராஜா (யாழ்ப்பாணம்)

தினசரி 4 காட்சிகள்

10-30, 2-30, 6-30, 9-45

எம். ஜி. ஆர்-ஜெயலலிதா மற்றும் பலர் நடித்த

**ஒளி விளக்கு**

(ஈஸ்ட்மென் கலர்)

(எஸ். ரி. ஆர். வெளியீடு)

மானிப்பாய்

**வெஸ்லி சினிமா**

தினசரி 6-30, 9-30 மணி

சிரிபோயா, போயா 2-30 மணி

சிவாஜி - பத்மினி நடித்த

**தூக்குத் தூக்கி**

இணுவில்

**ஸ்ரீ காலிங்கன்**

தினசரி 6-30, 9-30

சிரிபோயா, போயா 2-30

சிவாஜி சாவித்திரி நடித்த

**படித்தால் மட்டும்போதுமா**

**வின்ஸர்** (யாழ்ப்பாணம்)

தினசரி 4 காட்சிகள்

எம். ஜி. ஆர் - ஜெயலலிதா நடித்த

**குடியிருந்த கோயில்**

**MANOHARA** JAFFNA

Dailyat: 4-45, 7-00 & 9-45 p.m.

Pre-poya, Poya 10-30 a. m.

Warren Beatty in BONEIE AND CLYDE

(Aduts only) (Techni color)

**REGAL** at Jaffna

Daily at 4-45, 7-00 & 9-45 p. m

Tony Russel in THIEF OF SAMARKAN



அன்பு புத்தகசாலை, 27 D, பெரியகடை, யாழ்ப்பாணம்.

ஸ்ரீ லங்கா புத்தகசாலை, 234, கே கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம்.

**REGAL Jaffna**

You would not have never seen a picture like this in your life time

Releasing on Wednesday the 12th March 1969

Daily 4 Shows

A MAN......

A WOMAN.. ...

AND A LION.

The extraordinary true adventures that amazed the Whole World!

**BORN FREE**

(Cinemascope & Color)

This true story filmed in Kenya where it happened! You will have to see it to believe it. Special shows can be arranged for Schools. Please contact management for details.

Phone: 360

ரீகல் — யாழ்ப்பாணம்

உங்கள் வாழ்நாளில் என்றுமே இதுபோன்ற ஒரு படத்தைப் பார்த்து ரசித்திருக்கமாட்டீர்கள்

இம்மாதம் 12-ம் திகதி புதன்கிழமை முதல் கண்டுகளிக்கத் தயாராகுங்கள்!

தினசரி 4 காட்சிகள்

ஒரு மனிதன்

ஒரு பெண்

ஒரு சிங்கம்!

உலகத்தையே வியப்பிலாழ்த்திய அசாதாரணமான மயிர்க்கூச்செறியும் உண்மைச் சம்பவங்கள்

**போர்ன் ப்ரீ**

உணர்ச்சிகரமான இந்த உண்மைக் கதை நடந்த இடமான கென்யாவிலேயேபடமாக்கப்பட்டது!

மூன்று உயிர்களுக்குமிடையில் நடந்த பாச உணர்ச்சியைச் சித்தரிக்கும் சம்பவங்களை நம்புவதற்கு நீங்கள் நிச்சயம் பார்க்க வேண்டும்.

சிறுவர் முதல் பெரியோர்வரை ஒவ்வொருவரும் பார்த்து மகிழ வேண்டிய உயர்ந்த கருத்துக்களைக் கொண்ட சித்திரம். குடும்பத்துடன் கண்டு களிக்கத் தயாராகுங்கள்.

பாடசாலைகள் விசேஷ காட்சிக்கு ஏற்பாடு செய்யலாம். விபரங்களுக்கு மனேஜருடன் தொடர்பு கொள்க.

போன்: 360



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழர் சுதந்திரத்துடன் வாழும் நாள் கிட்டிவிட்டது

## தீவுப்பகுதி எம். பி. தெரிவிக்கும் நம்பிக்கை

அல்லைப்பிட்டி, வியா.

இலங்கையிலுள்ள இரு பெரும் தமிழ்க்கட்சிகளை நம்பி தமிழர்கள் ஏமாந்துவிட்டார்கள். அக்கட்சிகளை இனியும் நம்புவோமாகில் இந்நாட்டிலிருக்கும் தமிழினம் சிறிது சிறிதாக அழிந்துவிடும். சிங்களத் தலைவர்கள் தமிழர்களை ஏமாளிகள் என இதுவரை காலமும் நினைத்துவந்துள்ளார்கள். இதை நினைக்கும்போது ஒவ்வொரு வீரத் தமிழ் மகனின் இரத்தம் கொதிக்காமலில்லை. தமிழர்கள் உண்மையான சுதந்திரத்துடனும் சுயமரியாதையுடனும் சிங்கள மக்களுக்கு அடிபணியாமலும் வாழும் நாள் வெகு தூரத்திலில்லை,

மேற்கண்டவாறு வேலணை வங்களாவடி திறந்த வெளியரங்கில் தீவுப்பகுதி மக்களால் தமக்கு அன்பளிப்பாகக் கொடுக்கப்பட்ட மோட்டார் காரை ஏற்றுக்கொண்டு பேசும்போது தீவுப்பகுதி ஆட்சிமன்ற உறுப்பினர் திரு. வ. நவரெத்தினம் குறிப்பிட்டார்-

அவர் தொடர்ந்து பேசுகையில் அரசியலுக்காக நாம் எமது தன்மானத்தை இழக்கக்கூடாது. இந்நாட்டில் நாம் ஏன் தமிழராகப் பிறந்துவிட்டோம் என இதுவரை வேதனைப்பட்ட தமிழ் மக்களுக்கு விரைவில் விடிவுகாலம் ஏற்படப்போகிறது.

சிங்களம் படிக்கவில்லையென்ற ஒரேயொரு காரணத்திற்காக ஒவ்வொரு தமிழனுக அரசாங்க சேவையிலிருந்து நீக்கப்பட்டு வருகின்றார். அவர்களது இடத்திற்கு தமிழ் தெரியாத சிங்களவர்கள் நிரப்பப்பட்டு வருகிறார்கள். இவற்றைக் கண்டும் காணாததும்போல கண்மூடி மௌனியாக இருக்கின்றனர் எமது தமிழரசுக்கட்சினர். அவர்கள் அரசாங்கத்திலிருந்துகொண்டே வேடிக்கைபார்த்துக்கொண்டிருக்கிறார்கள். நான் எதிர்கட்சியிலிருந்துகொண்டே தமிழர்களைப் பாதிக்கும் ஒவ்வொரு விஷயத்திற்கும் முற்றுப்புள்ளி வைத்துக்கொண்டு வருகின்றேன். தமிழ் மாணவர்களுக்கும், தமிழர்களுக்கும் துரோகம் செய்த கல்விஅமைச்சருக்கு ஆட்சிமன்றத்தில் தமிழரசுக் கட்சி மிகுந்த பாராட்டும் தெரிவித்தது. பின்னர் அவர்களே கல்வி அமைச்சர் தமிழர்களின் விரோதி எனக் கூறுகிறார்கள். ஆட்சிமன்றத்தில் ஒரு வார்த்தையும், பொதுமக்களின் முன் ஒரு வார்த்தையும் பேசுமிவர்களா தமிழினத்தின் காவலர்கள்.

திரு, த. சண்முகலிங்கம் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் திரு. ப. கதிரவேலு. கு. வி. செல்லத்துரை. திரு. அ பொன்னுத்துரை எஞ்சினியர் சதாசிவம் உட்பட பலர் பேசினர்.

# 'உத்தியோகத்திலும் பார்க்க சிறந்தது விவசாயம்'

## — வவனியா எம். பி.

வவுனியா, வியா

''வாலிபர்கள் தங்கள் நாட்டில் உள்ள எத்தனையோ ஏக்கர் நிலங்கள் வீணுக செய்கை பண்ணுமல் காடாகிக் கொண்டுவரும் இந்நேரத்தில் அரசாங்க உத்தியோகத்தில் மோகங்கொண்டுஉள்ளார்கள். 5ஏக்கர் நிலத்தில் நல்ல முறையில் விவசாயம் செய்தால் அரசாங்க உத்தியோகத்திலும் பார்க்கக்கூடிய இலாபம் எடுக்கலாம். பண்டாரவன்னியன் காலத்தில் வவனியாவில் இருந்து வெளிநாடுகளுக்கு அரிசி ஏற்றுமதியாகியது. இதன் அறிகுறியாக இன்றும் முல்லைத்தீவுப் பகுதியில் பல சான்றுகள் உண்டு ...

...டத்தில் பேசும்போது கூறினார். கூட்டத்துக்கு சபா சண்முகநாதன் தலைமைவகித்தார். கூட்டத்தில் வவுனியா நகரசபைத் தலைவர் திரு. ம பொன்னையா உட்பட மற்றும் பலர் பேசினுர்கள்.

### வவனியாவில் அண்ணுவுக்குசிலை

வவனியா, வியா

வவனியா நகரசபை எல்லைக்குள் அறிஞர் அண்ணுவின் உருவச் சிலை வைக்கப்படும் இது பெரும்பாலும் வவனியா திறந்த வெளியரங்கில்தான் ... வைக்கப்படு...

### நாடு முன்னேற வழி

புன்னாலைக்கட்டுவன், வியா.

இஸ்ரேல் மக்கள்வாழ்வில் வெற்றிகொள்ளக் காரணம் அவர்களது நம்பிக்கையும் சுய மரியாதையும் ஆகிய இரண்டுமே. அன்றியும் எல்லோரும் சமம் என்ற மனோபாவமும் இஸ்ரேலின் உயர்வுக்கு இன்று காரணமாக இருக்கின்றது. இலங்கையில் சிறந்த கல்வி யூட்டப்படுமானால் நாமும் முன்னேற முடியும்.''

இவ்வாறு சாவகச்சேரி ஆட்சி மன்ற உறுப்பினர் திரு வி. என். நவரத்தினம் உரும்பிராய் இந்துக்கல்லூரிசரித்திர — அரசியல் மன்றக் கூட்டமொன்றில் பேசுகையில் குறிப்பிட்டார். செல்வன் எஸ். குகதாசன் தலைமையில் கூட்டம்நடைபெற்றது. எம். மரியதாஸ் நன்றி தெரிவித்தார்.

### வேலிச் சண்டையால் இருவர் ஆஸ்பத்திரியில்

யாழ்ப்பாணம், வெள்ளி

வேலித் தகராறு காரணமாக இருவருக்கிடையே ஏற்பட்ட வாய்ச்சண்டை இறுதியில் ஆயுதம் தாங்கிய கைகலப்பில் முடிந்ததாம்.

இதனுல் படுகாயத்துக்குள்ளான இருவரும் இப்போது யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

கோப்பாய் பகுதியில்நடைபெற்ற இச் சம்பவத்தில் முத்தன் வீரகத்தி ஆகிய இருவருமே படுகாயத்துக்குள்ளானவர்கள். இருவரும் மாறிமாறித் தாக்கியதாக பொலிசாருக்குத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கோப்பாய் பொலிசார் விசாரணை நடத்திவருகிறார்கள். (கா. நி.)

### இருவர்கைது

அளவெட்டி, வியா

கள்ளக்குடியேற்றக் காரர்கள் என சந்தேகிக்கப்பட்ட இருவர் காங்கேசன்துறை பொலிசாரல் கைது செய்யப்பட்டனர்.

காங்கேசன்துறை பொலிஸ் பாதுகாப்பில் இவ்விருவரும் வைக்கப்பட்டுள்ளனர். பொலிசார் விசாரணை தொடர்கிறது.

### தீர்த்தோற்சவம்

சுழிபுரம், வியா.

சுழிபுரம்- திருவடிநிலையில் மாசிமகதத் தீர்த்தம் ஆடினர். பொன்னாலை வரதராஜப் பெருமாள் ...

# சைகோன் மீது தொடர்ந்து ரொக்கட் தாக்குதல்

## அதிகாலை சம்பவத்தில் 21 பேர் பலியாகினர்

## நிக்ஸன் எச்சரிக்கையை வியட்காங் புறக்கணித்தது

சைகோன் மார்ச், 6

**இன்று அதிகாலையில் வியட்காங் பயங்கரவாதிகள் நடத்திய 'ரொக்கட்' தாக்குதலில் குறைந்தது 21 பொதுமக்கள் பலியாகியுள்ளனர்.**

**வடவியட்னுமுக்கு அமெரிக்க அதிபர் எச்சரிக்கை விடுத்த 20 மணி நேரத்துக்குள் இந்தப் பயங்கரத் தாக்குதல் நடைபெற்றுள்ளது.**

வியட்காங்கியர்சைகோன் நகர்மீது தென்வியட்னுமிலுள்ள முக்கிய நகரங்கள் மீது அண்மைக்காலமாக ஆரம்பித்துள்ள ரொக்கட் தாக்குதல் தொடர்ந்து நடைபெற்றால் அமெரிக்கா எதிர் நடவடிக்கைகளில் இறங்க நேரிடும் என்று அதிபர் நிக்ஸன் தமது ஐரோப்பிய சுற்றுப் பிரயாணத்தை முடித்துக் கொண்டு தாயகம் திரும்பிய பின்னர் நேற்று வடவியட்னுமுக்கு எச்சரிக்கை விடுத்தார். அந்த எச்சரிக்கைக்கு வடவியட்னும் எதுவித முக்கியத்துவமும் கொடுத்ததாகத் தெரியவில்லை. அதிபர் நிக்ஸன் எச்சரிக்கை விடுத்த 20 மணி நேரத்துக்குள் அதிபயங்கரமான தாக்குதல் ஒன்றினை இன்றுகாலையில் வியட்காங்கியர் நடத்தியிருக்கிறார்கள்.

தென்வியட்னும்தலைநகரில் பொதுமக்கள் வதியும் பகுதியில் இந்த ராக்கட் தாக்குதல் இடம்பெற்றது. காலைநேரமாகவிருந்ததால் காரியாலயங்களுக்கும் வேலைத்தலங்களுக்கும் மக்கள் போய்க்கொண்டிருந்தனர். அந்த வேளையில் ரொக்கட் வீச்சு நடைபெற்றது. இதனுல் 21 பேர் பலியானுர்கள். ஏராளமானவர்கள் படுகாயங்களுக் குள்ளானுர்கள்.

நேற்று தென்வியட்னும் பிரதம மந்திரியைச் சுட்டுக்கொல்வதற்கும் ஒரு முயற்சி எடுக்கப்பட்டு தோல்வியடைந்தது.

தென்வியட்னுமில் தற்பொழுது இடம் பெற்றுவரும் சம்பவங்கள்பற்றியும் மேற்கொண்டும் எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் குறித்தும் ஆலோசனைகள் நடத்துவதற்காக அமெரிக்க பாதுகாப்பு அமைச்சர் திரு. லெயார்ட் இன்று சைகோனுக்கு வருகிறார்.

இதற்கிடையில் தென்வியட்னுமிலுள்ள அமெரிக்க தலைமைக் காரியாலயங்கள் மீதும் படைநிலையங்கள் மீதும் வியட்காங்கியர் கடும் தாக்குதல்களை ஆரம்பித்துள்ளனர்.

### பிச்சைக்காரர் பெருகாமல் தடுக்க ..

சென்னை, மார்ச் 6

பிச்சைக்காரர்களுக்கு குடும்பக்கட்டுப்பாடு திட்டத்தின்படி கட்டாயமாக அறுவை சிகிச்சைசெய்ய வேண்டுமென்று தமிழ்நாடு சட்டசபையில் ஓர் அங்கத்தவர் யோசனை கூறினுர்.

இப்படி செய்தால் பிச்சைக்காரர்கள் நாட்டில் பெருகுவது குறையும் என்று அவர் கருத்து வெளியிட்டார். அறுவை சிகிச்சை வேறு எவரும் செய்து கொள்ளாமல் போனுலும் பிச்சைக்காரர்களுக்கு கட்டாயம்செய்தாக வேண்டும். இதனுல் பிச்சைக்காரக் குழந்தை சமூகத்தில் தோன்ருது இருக்கும் என்று வரவு செலவுத்திட்டத்தின் மீது பேசிய ஆசிரிய தொகுதி அங்கத்தவர் திரு. எம். சங்கரலிங்கம் கூறினுர்.

### 'உடுவில் ஆஸ்பத்திரியை சுன்னுகத்தில் நிறுவுக'

#### பட்டினசபை கோரிக்கை

அளவெட்டி, வியாழன்

'உடுவில் தொகுதியில் நிறுவப்படவிருக்கும் வைத்தியசாலையைச் சுன்னுகம் பட்டினசபை மக்களின் வசதிக்கேற்ப பட்டினசபை பகுதியில் நிறுவ உதவுங்கள்' என உடுவில் எம். பி. யைக் கோரும் தீர்மானம் ஒன்று சுன்னுகம் பட்டினசபையில் நிறைவேற்றப்பட்டுள்ளது.

இவ்வாஸ்பத்திரியை நிறுவ நடவடிக்கை எடுத்த உடுவில் எம். பி.க்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானம் ஒன்றும் சபையில் நிறைவேறியது.

இப்பிரேரணை 6-ம் வட்டார அங்கத்தவர் திரு. ஆ. நல்லைநாயகத்தினுல் முன்மொழிந்து, 3-ம் வட்டார அங்கத்தவர் திரு. ஆ. ஹென்றியால்வழிமொழியப்பட்டு ஏகமனதாக நிறைவேறியது.

ஆஸ்பத்திரி உடுவில் தொகுதி மத்தியில் சுன்னுகம் பட்டின சபை எல்லைக்குள் ஸ்தாபிக்கப்பட்டால் இணுவில், தாவடி, சுதுமலை, மானிப்பாய், சண்டிலிப்பாய், நவாலி, ஆனைக்கோட்டை, உடுவில், சுன்னுகம், ஏழாலை ஆகியஎல்லா இடங்களுக்கும் பேருதவியாகவிருக்குமென்றும், சுன்னுகம் பட்டின சபை எல்லைக்குள் மின்சார நிலையத்துக்கு அணித்தாயும் உடுவில் ஆலடிக்கு அணித்தாயும் முடிக்குரிய நிலம் உண்டு என்றும் தீர்மானிக்கப்பட்டது.

### கேரள அரசு 3 ம் ஆண்டு கொண்டாட்டம்

திருவனந்தபுரம், மார்ச் 6

கேரளத்தில் ஐக்கிய முன்னணி அரசு பதவிக்கு வந்ததின் மூன்ருவது ஆண்டு தினத்தை இன்று விமரிசையாகக் கொண்டாடப்படுகின்றது.

இதை யொட்டி 300 கைதிகள் விடுதலை செய்யப்படவிருக்கின்றனர். மற்றும் பல கைதிகளுக்கு சிறைத்தண்டனைக் குறைப்பும் வேதன உயர்வும் கொடுக்கப்படவிருக்கின்றது.

இந்தத் தினத்தை நம்பிக்கைமோசடி தினமாகக் கொண்டாடும்படி கேரள ராஜ்ய காங்கிரஸ் கட்சி கேட்டுக்கொண்டிருக்கின்றது.

### பிர்ளா நிறுவனம்

#### விசாரணை இல்லை

### நாடு முன்னேற தேவையான மொழி

குளியாப்பிட்டி வியா

''நாடு முன்னேற வேண்டுமானுல் இப்பொழுதுள்ள இளம் சந்ததியினருக்குக் கட்டாயமாக சர்வதேச மொழியாகிய ஆங்கிலம் கற்பிக்கப்பட வேண்டும்'' இவ்வாறு பன்னல மத்திய மகாவித்தியாலயத்தில் நடைபெற்ற கூட்டத்தில்பேசுகையில் கல்வி கலாச்சார அமைச்சர் திரு ஐ. எம். ஆர். ஏ. இரியகொல்லை கூறினுர்.

''மாணவர்கள் தங்கள் அறிவை வளர்க்கவும் மற்ற நாடுகளோடு தொடர்பு கொள்ளவும் ஆங்கிலம் கட்டாயமாக அவர்களுக்குத் தேவைப்படுகிறது. 100வருடங்கள் சென்ருலும் இந்நாட்டு மாணவர்கள் ஆங்கில உதவியின்றி ஒன்றும் செய்யவியலாது. ஆதலால் ஆங்கிலக் கல்வி அதிகரிக்க முயற்சிகள் எடுககப்பட வேண்டும் எனத் தெரிவித்த அமைச்சர் வெகுவிரைவில் வேலையில்லாப் பிரச்னையும் தீர்த்துவைக்கப்படும் எனக் கூறினுர்.

# ஜெருசலத்தில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரசாங்க உத்தியோகத்திலும் பார்க்கக்கூடிய இலாபம் எடுக்கலாம். பண்டார வன்னியன் காலத்தில் வவனியாவில் இருந்து வெளிநாடுகளுக்கு அரிசி ஏற்றுமதியாகியது. இதன் அறிகுறியாக இன்றும் முல்லைத்தீவுப் பகுதியில் பல சான்றுகள் உண்டு. ஆனுல் இன்று வெளிநாட்டில் இருந்து அரிசியை இறக்குமதி செய்யவேண்டிய நிலையில் உள்ளோம். இலங்கைக்குவேறு நாட்டில் இருந்து அரிசி இறக்குமதிசெய்யாமல் இலங்கையின் தேவையைப் பூர்த்தி செய்ய நம் வாலிபர்களால் முடியும்''

இவ்வாறு வவுனியா எம். பி. திரு. தா. சிவசிதம்பரம் மூன்று முறிப்பில் நடந்த வாலிபர் முன்னணியின் வருடாந்தப் பொதுக் கூட்.

## புதிய கட்டிடம் திறந்து வைக்கப்பட்டது

புங்குடுதீவு, வியா.

புங்குடுதீவு இறுப்பிட்டி அமி. வித்தியாலய புதிய கட்டிடம் கடந்தவாரம் திறந்துவைக்கப்பட்டது. டபகுதி பிரதம கல்வியதிகாரி திருமதி ஆர். எஸ். பாமர் கட்டிடத்தைத் திறந்துவைத்தார். தீவுப் பகுதி எம். பி. திரு. வி. நவரத்தினம் வைபவத்திற்குத் தலைமைவகித்தார்.

வரவேற்புரை நிகழ்த்திய வித்தியாலயஅதிபர் திரு. ந. பசுபதிப்பிள்ளை கட்டிடம் உருவாவதற்குஉதவியளித்த கல்விப்பகுதியினருக்கும் தொகுதி எம். பி. க்கும் நன்றி தெரிவித்ததுடன் தீவகத்திற்கு அமெரிக்க மிஷனரிமார் ஆற்றிய கல்வித் தொண்டினையும் பாராட்டினுர்.

பாடசாலைக்கு ஆசிரியர் ஒருவரும் பாலர் வகுப்புக்கு தளவாடங்களும் மற்றும் குடிதண்ணீர் வசதி விளையாட்டிடம் முக்கியதேவையென்றும், இத் தேவைகளைக் கல்விப்பகுதியார் விரைவில் நிறைவேற்றி உதவவேண்டுமென்றும அதிபர் ந. பசுபதிப்பிள்ளை வேண்டுகோள் விடுவித்தார்.

தீவுப்பகுதி வித்தியதிகாரி திரு ஏ.எஸ். நல்லையா உட்பட பிரம்மஸ்ரீ ஐ. கைலாசநாதக் குருக்கள், திருவாளர்கள் க. ச. ஆனந்தர், க. செல்வத்துரை, ஜெ யோசெப், மு. நாகரத்தினம் ஆகியோர் விழாவில் கலந்துகொண்டு உரையாற்றினர். திருமதி ப. சிவகுரு நன்றி தெரிவித்துப் பேசினுர். விழாவில் மாணவர்களின் கலைகதம்ப நிகழ்ச்சிகளும் இடம்பெற்றன.

## அண்ணுவுக்குசிலை

வவனியா, வியா

வவனியா நகரசபை எல்லைக்குள் அறிஞர் அண்ணுவின் உருவச் சிலை வைக்கப்படும் இது பெரும்பாலும் வவனியா திறந்த வெளியரங்கில்தான் வைக்கப்படுமென அறியப்படுகின்றது. சிலை நிறுவும் திட்டத்தில் வவனியா எம். பி. திரு. தா சிவசிதம்பரம் தேவையான சகல திட்டத்தையும்செய்து வருகிறுர் இது பற்றி ஆராய வவனியா நகரசபை தலைவர் திரு ம. பொன்னையா தலைமையில் ஒருபொதுக்கூட்டம் இம்மாதம் நடக்கவிருக்கிறது.

## மகா சபை தீர்மானம்

யாழ்ப்பாணம், வெள்ளி

தீண்டாமை ஒழிப்புச் சமூக குறைபாடுகளை நீக்குவது சம்பந்தமான விடயங்களில் சிறுபான்மைத் தமிழர் மகாசபை தீவிரமாக செயல்பட வேண்டுமென்ற தீர்மானம் திங்கட்கிழமை நடைபெற்ற மகாசபையின் பொதுசபைகூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

திருசி. சுப்பிரமணியம் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் மகாசபையின் அடுத்த மகாநாட்டை ஏப்ரல் மாதத்தில் நடத்துவதெனவும் நிலமற்றசிறுபான்மைத் தமிழருக்குஅவர்கள் வாழும் பகுதிகளில் குடியிருப்பு நிலம் பெற்றுக் கொடுப்பதெனவும் அரசாங்கம்செயல்படுத்தவிருக்கும் கிராமவிஸ்தரிப்புத் திட்டங்களில் கூடுதலாக நிலமற்ற சிறுபான்மைத் தமிழர்களுக்கு நிலத்தைப் பெற்றுக் கொடுப்பதில் மகாசபை கூடிய கவனம் எடுகக வேண்டுமெனவும் தீர்மானிக்கப்பட்டது.

(ந. நி)

## பிரிவுபசாரம்

சுழிபுரம், வியா.

பண்ணுகம் மெய்கண்டான் மகாவித்தியாலயத்திற் பல வருடங்களாக கடமைபுரிந்த ஆசிரியைகள் திருமதி கனகம்மா அப்பாப்பிள்ளை, திருமதி பி. குலேந்திரன், ஆகியோரின் சேவை நலம் பாராட்டி ஒரு பிரிவுபசாரக் கூட்டம் நடைபெற்றது.

தேநீர் விருந்தும் உபகாரங்களும் வழங்கப்பட்டு ஆசிரியைகள் இருவரும் கௌரவிக்கப்பட்டனர். மாணவர்களின் வந்தனைப் பாடல்கள் குறிப்புரைகளுடன் ஆசிரியர்களின் ஆசிகளும் இங்கு இடம்பெற்றன.

ரணை தொடர்கிறது.

## தீர்த்தோற்சவம்

சுழிபுரம், வியா.

சுழிபுரம்- திருவடிநிலையில் மாசிமகதத் தீர்த்தம் ஆடினர். பொன்னுலை வரதராஜப் பெருமாள் கோவில் சுவாமி தீர்த்தக்கரைக்கு அடியார்களால் கொண்டு வரப்பட்டது.

## தமிழ் மன்ற பணி

மொறட்டுவை, வியா.

கட்டுப்பத்தையில் தொழில் நுட்பவியற்கலாசாலை தமிழ் மன்றம் தமிழ் வளர்ச்சியில் பல ஆக்கவேலைகளில் ஈடுபட்டுள்ளது.

இம்மன்றம் வருடா வருடம் 'நுட்பம்' எனும் சஞ்சிகை ஒன்றினை வெளியிட்டு வருகின்றது. இவ்வருடமும் இச்சஞ்சிகை வெளிவரவிருக்கின்றது. இதில் பல தமிழ் அறிஞர்களின் படைப்புகள் இடம்பெறவிருக்கின்றன.

## 'கேதீஸ்வரத்தில் அமையவேண்டும்'

யாழ்ப்பாணம், வெள்ளி

'அகில இலங்கை இந்து மாமன்றத்தின் தலைமை அலுவலகம் திருக்கேதீச்சரத்தில் அமைய வேண்டும்' என்று கோரும் தீர்மானமொன்றை

அகில இலங்கை இந்து மாமன்றத்தின் அங்கத்துவ சங்கமான கைதடி இந்து வாலிபர் சங்கம் இந்து மாமன்றத்திற்கு அனுப்பி வைத்துள்ளது.

அகில இலங்கை இந்து மாமன்றத்தின் 14-ம்ஆண்டு நிறைவு விழா இம்மாதம் 26-ம் திகதி பம்பலப்பிட்டி சரஸ்வதி மண்டபத்தில் நடைபெறுவதை முன்னிட்டு கைதடி இந்து வாலிபர் சங்கம் இன்னும் இரண்டு தீர்மானங்களையும் அனுப்பியுள்ளது.

## விஞ்ஞான பொருட்காட்சி

அளவெட்டி, வியா.

கல்வி நூற்ருண்டை முன்னிட்டு விஞ்ஞான பொருட்காட்சி ஒன்று தெல்லிப்பளை யூனியன் கல்லூரியில் இம்மாதம் 12, 13, 14-ம் திகதிகளில் நடைபெறவிருக்கிறது.

இப் பொருட்காட்சி தினமும் காலை 9 மணிமுதல் மாலை 6 மணிவரை நடைபெற இருக்கிறது.

தென்வியட்னும்தலைநகரில் பொதுமக்கள் வதியும் பகுதியில் இந்த ராக்கட் தாக்குதல் இடம்பெற்றது. காலை நேரமாகவிருந்ததால் காரி தலைமைக் காரியாலயங்கள் மீதும் படைநிலையங்கள் மீதும் வியட்காங்கியர் கடும் தாக்குதல்களை ஆரம்பித்துள்ளனர்.

# ஜெருசலத்தில் 80 பேர் கைது

## 7 பேர் பெண்கள்

ஜெருசலம், மார்ச். 6

ஜெருசலம் நகரில் பயங்கர நடவடிக்கைகளில் ஈடுபட்டு வந்ததாகக் கூறப்படும் 80 பேரை இஸ்ரேலிய அதிகாரிகள் கைது செய்திருக்கிறுர்கள். இவர்களில் 7 பேர் பெண்கள்.

நான்கு வல்லரசு கூட்டு முயற்சியால் மேற்காசியாவில் அமைதியை ஏற்படுத்தி விடமுடியும் என்பதில் தமக்கு நம்பிக்கையில்லையென்று இஸ்ரேல் வெளி நாட்டு அமைச்சர் திரு. எபான் அமெரிக்க அதிகாரிகளுடன் ஆலோசனைகள் நடத்திவிட்டு கருத்து வெளியிட்டிருக்கிறுர்.

மேற்காசிய அமைதிக்கு வழிகாணுவதற்கான ஐ. நா. அதிகாரி திரு குணர்ஜாரிங் இப்பொழுது கெய்ரோ வந்திருக்கிறுர். எகிப்து அமைச்சர் திரு. றியாட்டுடன் அவர்நேற்று ஆலோசனைகள் நடத்தினுர்.

## மேற்கு ஜெர்மன் அதிபராக டாக். ஹைனமேன் தெரிவு

பொன், மார்ச். 6

மேற்கு ஜெர்மன் அதிபராக டாக்டர் ஹைனமேன் தெரிவுசெய்யப்பட்டிருக்கிறுர்.

இவர்சோஷலிஸ ஜனநாயகக் கட்சியைச் சேர்ந்தவர். மேற்கு ஜெர்மனியின் நீதி மந்திரியாக இருக்கிறுர், இவருக்குஇப்பொழுதுவயது 69.

மேற்கு ஜெர்மன் அதிபர் தேர்தல் மேற்கு பெர்லினில் நடைபெற்றுக் கொண்டிருந்த உச்சக்கட்டத்தின் பொழுது மேற்கு பெர்லினுக்கான போக்குவரத்து வாயில்களை சிறிது நேரம் கிழக்கு ஜெர்மனி மூடிவிட்டது. சிலமணிநேரத்தின் பின் வாயில்கள் திறக்கப்பட்டன.

தேர்தல்சமயத்தில்வாயில்களை மூடிவிட்டது குறித்து அமெரிக்கா, பிரிட்டன், பிரான்ஸ் ஆகிய மூன்று நாடுகளும் சோவியத் யூனியனுக்கு ஆட்சேபம் தெரிவித்துள்ளன. அதிபர்தேர்தல் முடிவுற்றவுடன் இந்த ஆட்சேபம் தெரிவிக்கப்பட்டது.

பாண்டிச்சேரியில்

## சூறவளி வேகத்தில் பிரசாரம் நடக்கிறது

பாண்டிச்சேரி, மார்ச். 6

பாண்டிச்சேரியில் எதிர் வரும் 9-ம் திகதி நடைபெறவிருக்கும் இடைத்தேர்தலில் வெற்றி பெறுவதற்காக தி. மு. கழகமும் காங்கிரஸ் கட்சியும் தீவிர பிரசாரங்களை நடத்திவருகின்றன.

காங்கிரஸ் தலைவர்களில் ஒருவரான திரு. காமராஜ் பாண்டிச்சேரிக்கு சென்று சூறுவளி பிரசாரம் செய்து வருகின்ருர் தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு. கருணநிதி இன்று பாண்டிச்சேரிக்கு போகவிருக்கிறுர். மக்கள் திலகம் எம். ஜி. ஆரும் பாண்டிச்சேரிக்கு பிரசாரத்துக்காகப் போவார் என்று தெரிகின்றது. கர்ங்கிரஸ்தலைவர் சி. சுப்பிரமணியம், பழையமந்திரிகள் பூவராகன், கக்கன் ஆகியோர் பாண்டிச்சேரியில் ஏற்கனவே முகாமிட்டுள்ளனர்.

தாக வேண்டும். இதனுல் பிச்சைக்காரக் குழந்தை சமூகத்தில் தோன்ருது இருக்கும் என்று வரவு செலவுத்திட்டத்தின் மீது பேசிய ஆசிரிய தொகுதி அங்கத்தவர் திரு. எம். சங்கரலிங்கம் கூறினுர்.

## கண்ணதாசன் விடுதலையானுர்

சென்னை, மார்ச். 6

கவிஞர் கண்ணதாசன் மீது திருக்குறள் முருகேசன் தொடர்ந்திருந்த அவதூறு வழக்கில் சமரசம் ஏற்பட்டுள்ளது.

நீதிமன்றத்துக்கு வெளியில் சமரசம் ஏற்பட்டுள்ளதாகவும் எனவே வழக்கைத் தொடர்ந்து நடத்தவிரும்பவில்லையென்றும் வாதிதரப்பில் தெரிவிக்கப்பட்டது. இதைத்தொடர்ந்து கண்ணதாஸன் விடுதலை செய்யப்பட்டார்.

கைமோசடி தினமாகக் கொண்டாடும்படி கேரள ராஜ்ய காங்கிரஸ் கட்சி கேட்டுக்கொண்டிருக்கின்றது.

## பிர்ளா நிறுவனம் விசாரணை இல்லை

புதுடில்லி மார்ச் 6

பிர்ளா நிறுவனங்கள் பற்றிய புகார்கள் பற்றி ஆராய கமிஷன் நியமிக்க வேண்டும் என்று இந்திய ஆட்சி மன்றத்தில் எதிர்கட்சியினர் விடுத்த கோரிக்கைகளை துணைப்பிரதம அமைச்சரும் நிதி அமைச்சருமான திரு மொரார்ஜிதேசாய்நிராகரித்துவிட்டார்.

இந்த நிறுவங்கள் பற்றி அரசாங்கம் எல்லா விசாரணைகளையும் நடத்திநடவடிக்கைகளும் எடுத்துள்ளது. எனவே கமிஷன் விசாரணை தேவையில்லையென்று அவர் கூறினுர்.

## ஆயிரம் குடும்பங்களுக்கு மைசூரில் மறுவாழ்வு
### புதிய ரப்பர் தோட்டம் நிறுவப்படும்

புதுடில்லி, மார்ச். 6

இலங்கையிலிருந்து இந்தியாவுக்குத் திரும்பும் சுமார் 1000 குடும்பங்களுக்குமைசூரில் தென் கன்னடப் பகுதியில்மறுவாழ்வு கொடுக்கப்படும்.

இத்தகவலை மைசூர் முதலமைச்சர் திரு வீரேந்திரா பாட்டில் சட்டசபையில் நேற்று வெளியிட்டார்

இந்தியா திரும்புகிறவர்களில் பெரும்பான்மையானவர்கள் அனுபவமிக்க தோட்டத் தொழிலாளர்களாய் இருப்பதால் இவர்கள் ரப்பர் தோட்டங்களில் குடியமர்த்தப்படுவார்கள். இவர்களுக்கு மறுவாழ்வு கொடுக்கும் விதத்தில் புதிய றப்பர் தோட்டங்கள் அமைக்கப்படும் இந்தத்திட்டத்திற்காக மத்திய அரசு மைசூர் மாநிலஅரசுக்கு 2 கோடியே 75 லட்பம் ரூபாய் கொடுத்துதவவிருக்கின்றது.

புதுடில்லி, மார்ச் 6.

தமிழ் நாட்டில் நாகபட்டணத்திலும், அந்தமான் தீவிலும் இரு புதிய கலங்கரை விளக்கங்களை அமைக்க இந்திய அரசு முடிவு செய்திருக்கிறது.

நாட்டு மாணவர்கள் ஆங்கில உதவியின்றி ஒன்றும் செய்யவியலாது. ஆதலால் ஆங்கிலக் கல்வி அதிகரிக்க முயற்சிகள் எடுககப்பட வேண்டும் எனத் தெரிவித்த அமைச்சர் வெகுவிரைவில் வேலையில்லாப் பிரச்னையும் தீர்த்துவைக்கப்படும் எனக் கூறினுர்.

## சீசன் டிக்கட் பிரச்னை
### 9-ம் திகதிவரை அவகாசம்

அளவெட்டி, வியாழன்

தொழில் நுட்பக் கல்லூரி மாணவர்களின் சீசன் டிக்கட் பிரச்னையை இம்மாதம் 9-ம் திகதிக்குள் தீர்க்காவிட்டால் அரசாங்கத்தை எதிர்த்துப் போராட மாணவர்கள் ஆயத்தமாக வேண்டும் என்று இலங்கை தொழில் நுட்பமாணவர் சங்க சம்மேளனம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தொழில் நுட்பக் கல்லூரி மாணவர்களுக்கு கடந்த மாதம் முதல் இ. போ. ச. சீசன்டிக்கட் மறுக்கப்பட்டது தெரிந்ததே.

## 'பஸ் சேவையை நீடிக்கவும்'

அளவெட்டி, வியா.

தெல்லிப்பளைச் சந்திவரைக்கும் சேவையில் ஈடுபடும் இ. போ. ச. பஸ்ஸை மாவிட்டபுரம்வரை விஸ்தரிக்கும்படி மாவிட்டபுரம் கிராமமுன்னேற்றச்சங்கம் இ. போ. ச. முகாமையாளருக்கு மஜர் ஒன்று அனுப்பியுள்ளது.

# விண்வெளி வீரருககு வயிற்றுக்கோளாறு
## வானில் நடக்கும் சோதனை ரத்து

வாஷிங்டன், மார்ச். 6

விண்வெளியில் இப்பொழுது வலம்வந்துகொண்டிருக்கும் அப்போலோ-9 விண்வெளி வீரர்கள் மூவரில் ஒருவருக்கு வயிற்றுக் கோளாறுஏற்பட்டுள்ளது.

இதனுல் இவர்களில் இருவர் விண்வெளியில் நடப்பதாகவிருந்த திட்டத்தை விண்வெளி வீரர்கள் ரத்து செய்துள்ளனர்.

விண்வெளியில் இரண்டு மணிநேரம் நடக்கும்சாதனை கைவிடப்பட்டாலும் இது ஒரு பெரிய நஷ்டமில்லையென்று விஞ்ஞானிகள் அறிவித்துள்ளனர்.

நேற்று அப்போலோ-9 வீரர்கள் எதிர்காலத்தில் மனிதன் சந்திரனில் இறங்குவதற்கு மிகவும் அவசியமானதொரு சோதனையை நிகழ்த்தி வெற்றி பெற்ருர்கள்.

அடுத்த சிலதினங்களில் மேலும் பல அற்புதமான சோதனைகளைஅவர்கள் நிகழ்த்தவிருக்கிறுர்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மணிவாக்கு

ஏராளமான உரைகள் நிகழ்த்துவதனால் நாம் சுய ஆட்சிக்குத் தகுதி உடையவர்களாக முடியாது. நமது நடத்தையினால்தான் அந்தத் தகுதியைப் பெறவேண்டும்.

—மகாத்மாகாந்தி,


# ஈழநாடு

Eelanadu National Tamil Daily
Telegram: "EELANADU" Jaffna.
Post Box: 49, Jaffna. Telephone: 389,

யாழ்ப்பாணம், கீலக வருஷம் மாசிமாதம் 24-ந் திகதி
(7 - 3 - 69)


## அரசாங்க ஊழியர்

அபிவிருத்தித்திட்ட வேலைகளுக்கு வேண்டுமென்றே சதிசெய்யும் அரசாங்க ஊழியர் மீது கடும் நடவடிக்கை எடுப்பதென்று ஆளும் கட்சிக்குழு தீர்மானித்திருக்கிறது. சில அரசாங்க இலாகாக்களைச் சேர்ந்த அரசாங்க ஊழியர் அரசாங்கத்துடன் ஒத்துழைக்கவில்லையென்றும் அமைச்சர்கள் பிறப்பிக்கும் உத்தரவுகள் கூட புறக்கணிக்கப்படுகிறதென்றும் ஆளும் கட்சி அங்கத்தவர்கள் பலர் குற்றம்சாட்டியதைத் தொடர்ந்து 'சதி செய்யும் ஊழியர் மீது கடும் நடவடிக்கை எடுப்பது' என்ற தீர்மானமும் நிறைவேற்றப்பட்டிருக்கிறது. அரசாங்க ஊழியர்களுக்குத் தனிப்பட்ட அரசியல் கொள்கைகளிருக்கலாம். அதில்தவறில்லை ஆட்சிபீடத்திலிருக்கும் அரசாங்கத்தின் கொள்கைகளையும்திட்டங்களையும் அமுல் நடத்தவேண்டியபொறுப்பும் கடமையும் அவர்களுடையது.

அரசாங்கத்தின் கொள்கைகளையும் திட்டங்களையும் அமுல் நடத்தவேண்டிய அரசாங்க ஊழியர் எவராயினும் அதற்கு மாறாகவோ, இடையூறாகவோ நடந்துகொள்வதாயின் அவர்கள் அரசாங்கத்துக்கு மாறாகமட்டுமல்ல அந்த அரசாங்கத்தை ஆட்சிபீடத்தில் அமர்த்திய பொதுமக்களுக்கு மாறாகவும் அவர்களுடைய பணத்தில் சம்பளம் பெற்றுக்கொண்டே அவர்களுக்குத் துரோகம் செய்வதுமாகும்.

தமிழ்மொழிச் சட்ட (விசேஷ) விதிகள் கொண்டுவரப்பட்டபோது அதை எதிர்த்து அரசாங்க ஊழியர் பலர் வேலைநிறுத்தம் செய்தனர். இவர்கள் சிலரின் மீது அரசாங்கம் ஒழுங்கு நடவடிக்கையும் எடுத்தது. தமிழ்மொழிச்சட்டம் காலஞ்சென்ற பிரதமர் திரு. எஸ். டபிள்யூ. ஆர். டி. பண்டாரநாயக்காவினால் கொண்டுவரப்பட்டது. அதன் பின் வந்த அரசாங்கங்களும் இந்தச்சட்டத்தை ஏற்றுக்கொண்டன. ஆனால் திரு. டட்லியின் தலைமையிலான தேசிய அரசாங்கம் அந்தச்சட்டத்துக்கு விதிகளைக் கொண்டுவந்தது. அரசியல் காரணங்களுக்காக இந்த விதிகளை எதிர்க்கட்சி அரசியல் கட்சிகள் எதிர்த்தன. இந்த அரசியல் கட்சிகளின் தூண்டுதலுக்கு அரசாங்க ஊழியர் சிலரும் அவர்களின் தொழிற்சங்கங்கள் சிலவும் இடம் கொடுத்துவிட்டன. தொழிற்சங்கங்கள் அதுவும் அரசாங்க ஊழியரின் தொழிற்சங்கங்கள் மறைமுகமாக அரசியல் கட்சிகளின் ஆதிக்கத்தின் கீழிருப்பதும் அரசாங்க சேவையில் அதாவது அரசாங்க நிர்வாகத்தில் அரசியல் தலையீடுகளுக்கு இடமளிக்கப்பட்டதும் தான், அரசாங்கத்தின் கொள்கைகளும் திட்டங்களும் நிறைவேறுவதற்கு கட்சி அரசியல்மனப்பான்மை கொண்ட அரசாங்க ஊழியர் இடையூறாக இருப்பதற்குக் காரணம்.

அரசாங்கத்தின் கொள்கைகளையும் திட்டங்களையும் அமுல் செய்வதற்கு இடையூறு செய்யும் அரசாங்க ஊழியர் விஷயத்தில் அரசாங்கம் விழிப்புடனிருந்து தகுந்த நடவடிக்கை எடுக்க வேண்டியது அவசியம்தான். இதேசமயம் அரசாங்க ஊழியரும் தங்கள் அரசியல் கொள்கை எதுவும் இருப்பினும் அரசாங்க ஊழியர் என்ற முறையில் தங்கள் கடமையையும் பொறுப்பையும் உணர்ந்து பழைய போக்கை மாற்றி அரசாங்கத்தின் கொள்கைகளையும் திட்டங்களையும் அமுல் நடத்தி அரசாங்கத்துக்கும் பொதுமக்களுக்கும் நாட்டுமக்களுக்கும் விசுவாசமாக நடந்துகொள்ளவேண்டும்.

## சீன - சோவியத் மோதல்

ஆட்சி மன்றத்திலே

# அமைதி விரும்பும் பிரதமருக்கே ஆத்திரம் பிறந்தது
# வார்த்தை விளங்காததால் வந்த வினை



ஆட்சி மன்றத்திலே அணுசக்தி அமைப்பு பற்றிய மசோதா விவாதத்திற்கெடுத்துக் கொள்ளப்படவிருந்ததாலோ என்னவோ நேற்று முன்தினம்ஆரம்பத்திலேயே 'சூடு' நிறைந்த சூழல் உருவாகி விட்டது!

காரசாரமான வாக்குவாதங்களோடும் ஆத்திரம் நிறைந்த பேச்சுகளுடனும் ஆரம்பித்த சூடு எதிர்க்கட்சியினருக்கும் ஆளும் கட்சியினருக்கும் இடையிலான 'கைகலப்பில்' உச்ச கட்டத்தையடைந்துதான் தணிந்தது.

### பண்டாரநாயக்காவுக்கு ஒரு வாரம் தண்டனை

அண்மையில்உயர்நீதி மன்றத்தால் அளிக்கப்பட்ட தீர்ப்பின் பிரகாரம் பண்டாரகமை எம். பி. யாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட திரு. ஜோர்ஜ் கொத்தலாவலை சத்தியப்பிரமாணம் செய்ய வந்தபோது வலப்பனைத் தொகுதி எம். பி. திரு. டி. பி. எம். ஹேரத், ''நீதிமன்றத்தால் எம். பி. யாகத் தேர்ந்தெடுக்கப் பட்டவர் சத்தியப்பிரமாணம் செய்துகொள்வதை எதிர்த்துப் பேசி, அதன்பின் அவர் சொன்னதை ஆதரித்துப் பேசிய கம்பஹா எம். பி. திரு. எஸ். டி. பண்டாரநாயகா-மாவோ சிந்தனைகளின் வழிநடந்து பாராளுமன்ற ஜனநாயகத்தை புரட்சி மூலம் தகர்க்க வேண்டும் என்று நம்பும் சீனச் சார்பு கம்யூனிஸ்ட் கட்சி ஆதரவாளர் ஆட்சி மன்றத்தை ''திருடர்கள் குகை'',

பிடிவாதமாக மறுக்கவே, சபாநாயகர். அவரை ஆட்சி மன்ற நடவடிக்கைகளிலிருந்து தற்காலிமாக நீக்கி வைக்கும் பிரேரணையைக் கொண்டுவரும்படி ராஜாங்க அமைச்சர் திரு. ஜே. ஆர். ஜயவர்தனவைக் கேட்டுக் கொண்டார்.

சபாநாயகரின் கட்டளைக்கு அடிபணிய மறுக்கும் உறுப்பினர்களைத் தண்டிக்கும் விதமாக அவர்களை ஆட்சி மன்ற நடவடிக்கைகளிலிருந்து சில காலம் நீக்கி வைப்பது சாதாரணமாக அனுஷ்டிக்கப்படும் நடைமுறைப் பழக்கம்தான். இருந்தாலும் திரு. ஜே. ஆர். ஜயவர்தன எழுந்து திரு. எஸ். டி. பண்டாரநாயக்காவை ''ஒரு வருடத்திற்கு சபை நடவடிக்கைகளிலிருந்து நீக்கிவைக்கப் பிரேரிக்கிறேன்.'' என்று சொன்ன போது, பிரேரணையை கொண்டுவரும்படி சொன்ன சபாநாயகரே அதிர்ந்து போனார்! என்ன ஒரு வருடத்திற்கா? சில வாரங்கள் தானே நீக்கி வைப்பது வழக்கம்' என்று சொல்லவே, இறுதியில் திரு. எஸ். டி. பண்டாரநாயகா ஒரு வார காலத்துக்கு சபை நடவடிக்கைகளிலிருந்து தற்காலிகமாக நீக்கிவைக்கப் பட்டார்!

### எதிர்க்கட்சியினர் வெளிநடப்பு

தமிழரசுக் கட்சியினர் முதன்முறையாக ஆளும் கட்சியுடன் சேர்ந்து ஆதரவாக வாக்களிக்கவில்லை. சபை நடவடிக்கைகளில் இப்படியாக சூடு பிடிக்க ஆரம்பித்து, புது திருப்பமடைந்த பின்னர், திரு. ஜோர்ஜ் கொத்தலாவலை சத்திய பிரமாணம் செய்து கொள்ள சபாநாயகரிடம் வந்தபோது திருமதி பண்டாரநாயகா, எதிர்க்கட்சிகளின் எதிர்ப்பைத் தெரிவிக்குமுகமாக எழுந்து வெளிநடப்புச் செய்ய அவரைத் தொடர்ந்து ஏனைய எதிர்க்கட்சி உறுப்

### திருமதி பண்டாரநாயகாவை கொல்ல சதியா

அடுத்து எதிர்க்கட்சித் தலைவி திருமதி பண்டாரநாயகா, சபாநாயகரின் அனுமதியுடன் தன்னைக் கொன்றொழிக்க நடைபெற்றதாகக் கூறப்பட்ட சதித் திட்டம் சம்பந்தப்பட்ட தகவல்களையும், அதன்மீது பொலிசார் எடுத்துக் கொண்ட நடவடிக்கைகளையும் பற்றி ஒரு விளக்கம்கூறினார்.

''பூரண விசாரணை செய்து முடிக்கும்வரையும் இந்த சதித்திட்டம் பற்றிய தகவலைப் பரம இரகசியமாக் வைத்திருக்கும்படியும் எக்காரணம்கொண்டும் இத்தகவலைப் பகிரங்கப்படுத்திவிடவேண்டாமென்றும் பொலிஸ் மா அதிபரைக் கேட்டுக்கொண்ட திருமதி பண்டாரநாயகா, ''மகாத்மாகாந்தி, மாட்டின் லூதர்கிங், லுமும்பா போன்றோர்

நமது நிருபர்

பெரி. சுந்தரலிங்கம் எழுதுவது

எல்லாரும் அரசியல்காரணங்களுக்காகக் கொலைசெய்யப்பட்டிருக்கிறார்கள்'' என்பதால்தான் பொலிஸ் மா அதிபரிடம் இத்தகவலை தெரிவித்து மேற்கொண்டு விசாரணையும், தக்க நடவடிக்கையும் எடுக்கக் கூறியதாகச் சொன்னதோடு, இந்தச் சதித்திட்டம்பற்றி தனக்கு முதன்முதல் தகவல் தெரிவித்த திரு. முனிதாசா பெரேரா என்பவர் 19-2-69 திகதி பொலிசாரிடம் கொடுத்த வாக்குமூலத்தையும் சபையில் சமர்ப்பித்தார்.

### பிரதமர் டட்லி அளித்த தகவல்கள்

எதிர்க்கட்சித் தலைவர் பேசியதை தொடர்ந்து, பிரதமர் டட்லி சேனநாயக்கா எழுந்து ''தகவலை கொடுத்தவரின் முதல் வாக்குமூலத்தை மட்டுமல்ல

O முனிதாசா பெரேரா என்பவர் படுமோசமான கஞ்சாக்குடியர் (ஆளும்கட்சியினரின் ஆரவாரமான சிரிப்பு).

O தினசரி கஞ்சா குடிக்காவிட்டால் இவரால் ஒன்றுமே செய்யமுடியாது.

O கஞ்சா குடித்தவுடன் ஏற்படும் போதை மயக்கத்தில் இவர் எதையும் செய்வாரென்றும் கடும் வெயிலையும் பொருட்படுத்தாமல், இலட்சியமேதுமின்றி மைல் கணக்கில் நடந்துகொண்டே இருப்பது உண்மையென்றும் முனிதாசா பெரேராவே ஒப்புக்கொண்டுள்ளார்.

O கஞ்சாவினால் ஏற்படும் நாற்றத்தை அவர் மனைவியிடமிருந்து மறைக்க எப்பொழுதும் ஒருபோத்தல் 'சென்ட்'டையும்வைத்திருப்பவர்- (ஆளும் கட்சியினர் பலத்த சிரிப்பு)

இப்படியாகப் பிரதமர், பொலிசுக்கும் எதிர்க்கட்சித் தலைவிக்கும் சதித்திட்டம் பற்றிதகவல் கொடுத்தமுனிதாசா பெரேரா 'நற்குணங்களுக்கும், தகைமைகளுக்கும்' நற்சான்றிதழ்களை அடுக்கிக்கொண்டே வரும் போது டாக்டர் என். எம். பெரேரா ஓரிடத்தில் குறுக்கிட்டு, 'சோமராமாவும்கஞ்சாக்குடியர் தானே!' என்றார்!

இந்தச் சதித்திட்டத்தை- பொய்யென்றுதகவல்கொடுத்தவரே ஒப்புக்கொண்ட சதித்திட்டத்தை- வைத்துக் கொண்டு அரசியல் லாபம் சாதிக்கின்றவர்களைகாரசாரமாக சாடிக்கொண்டிருந்த பிரதமருக்கு, டாக்டர் என் எம். சோமராமாவை நினைவுபடுத்தியது எதிர்க்கட்சியினரைத் தாக்கத்தக்க ஆயுதமாகப் பயன்பட்டது!

### தண்டிக்கப்பட்டது யார்? நாங்களா?

'சோமராமாவைச் சொல்லுகிறீர்களே! என்ன நடந்தது? வழக்கும் நடத்தினீர்கள்? விசாரணைக்கமிஷனும் நியமித்தீர்களே! தண்டிக்கப்

குழப்பம்! யார் என்ன பேசுகிறார்கள், என்ன சொல்லுகின்றார்கள் என்றே தெரியவில்லை.

மைத்திரிபாலாவுக்கு இடப்புறத்தில் அமர்ந்திருந்த திருமதி பண்டாரநாயக்கா முகத்தைக் கைகளால் மூடிக்கொண்டிருந்த இடத்தை விட்டு அசையாது இருந்தார். அவரைச் சுற்றிலும்எதிர்க்கட்சியினர், ஆளும்கட்சியினர் பலப்பரீட்சையில் மும்முரமாக ஈடுபட்டிருந்தனர்.

திருவாளர்கள் சிவசிதம்பரம், பெர்னாட்சொய்சா, பிரேமதாசா போன்றோரும் சபை அலுவலர் திரு. சாம் விஜயசிங்க, உதவி அலுவலர் திரு. கொஸ்வத்த, படைக்கலச் சேவிதர் ஆனந்தா டி சில்வா ஆகியோரும் இன்னும் பலரும் நடுவில் நின்று நிலைமையைச் சமாளித்து அமைதியை நிலைநாட்ட முயன்றனர்!

ஜே. ஆர். ஜயவர்த்தனவும் இருந்த இடத்தைவிட்டு அசையவில்லை!

### 'ஹூ'வா? 'யூ'வா?

பத்து நிமிடங்கள் நடந்த இந்தக் குழப்பத்தின் பின்னர்தான் மைத்திரிபால 'ஹூ' என்று சொன்னது பிரதமர் காதில் 'யூ' என்று விழுந்திருக்கிறது. எனவே நீர் தான் அவர்களுக்குபின்னால் இருந்தீர்?) சொல்லிவிட்டாரே என்று ஆத்திரத்தில்தான் பிரதமர் அப்படிக் கோபத்துடன் சென்றிருக்கிறார் என்ற உண்மை வெளிவந்தது.

''ஹூ'' என்று சொன்னதை 'யூ' என்று பிழையாகக்கேட்டுவிட்டதால் ஏற்பட்ட அசம்பாவிதங்களுக்கு சபாநாயகரிடமும், சபையினரிடமும், மாண்புமிகு உறுப்பினரிடமும் மன்னிப்பு கேட்டுக்கொண்டார். மாண்புமிகு பிரதம மந்திரி திரு. டட்லி சேனநாயக்கா!

(8-ம்கலத் தொடர்ச்சி)

கிறது. வழக்கு விசாரணை நடப்பின் பல உண்மைகள் அம்பலமாகலாம்.எப்படியும் இந்தச் சம்பவத்தால், எதிர்க்கட்சித் தலைவர் சிறிமாவுக்கு விசேஷ விளம்பரம் கிடைக்கமுடிந்துள்ளது. அடுத்த தேர்தலில் இதுவும் அவருக்கு ஒரு நன்மையாக இருக்கலாம். உயிருக்கே ஆபத்து ஏற்படுவதாயினும், அரசியல் 'மூட்டைப்பூச்சி' கடித்தவர்களுக்கு, அதை விட்டுவிட மனம் லேசில்

## ஐயாறன் எழுதுவது

உலகிலே பல ஆட்சி மன்றங்களிலும் துப்பாக்கிச் சூடு, வெடிகுண்டு வீச்சு, கத்திக்குத்து, அடிதடி அமளிகள் நடந்துள்ளன. அத்துடன் ஒப்பிடுகையில் இலங்கையில் முந்தாநாள் இலங்கைப் பார்லிமென்ட் சபையிலே நடந்துள்ளது, அவ்வளவு பெரிய காரியமல்ல.

என்றாலும் பிரதமர் போன்ற பெரிய பதவிவகிப்பவர்கள், ஒரு சொல்லைத் தவறாகப் புரிந்துகொண்டு, எதிர்க்கட்சியினரை நோக்கிப் பாய்ந்ததும், வாய்ச் சண்டை, கைச்சண்டையாக மாறியதும், அதில் பல எம். பி.மார்கள் கலந்துகொண்டதும் பற்றி யாரும் பெருமை கொள்ளமுடியாது. தனது தவறை உணர்ந்தவுடன் பிரதமர் டட்லி, சபையில் மன்னிப்பு கேட்டுக்கொண்டு விட்டதால், நல்லவேளையாக இச்சம்பவம் பெரிதாகாமல் அத்துடன் முடிந்துவிட்டது.

0 0 0

எதிர்க்கட்சித் தலைவரான சிறிமாவைக் கொலைசெய்யச் சதி நடந்தது உண்மைதானா? அவரைக் கொல்ல யாரும் ஏன் நினைக்கவும் வேண்டும்? என்று ரயிலில் கொழும்புக்குச் செல்லுகையில் கண்டியிலிருந்து வந்த டாக்டர் ஒருவரைக் கேட்டேன். சிறிமாவை நீக்கிவிட்டால், எதிர்க்கட்சி குலைந்துவிடுமென்றும் இதனால் இப்படியான அரசியல் நோக்கத்துடன் சதி நடக்கக் காரணமுண்டென்றும் சொன்னார் அவர்.

பிரதமர்களையும் கொலை செய்கிறார்கள். எதிர்க்கட்சித் தலைவர்களாயினும் ஆபத்துத்தான் போலும். என்றாலும் பிரதமர் பதவிக்கும், எம். பி.யாவதற்கும் எவ்வளவு பேர் போட்டாபோட்டி போட்டு முன்வருகிறார்கள்! பண்டாரநாயகா பிரதமராக இல்லாதிருந்திருப்பின் அவரைக் கொலைசெய்ய யாரும் நினைத்திருப்பரா?

சமீபத்தில் ஓர் எம். பி. வீட்டுக்குத் தற்செயலாகச் சென்றிருந்தேன். அங்கு ஏழெட்டு பேர் எம். பி.க்காகக் காத்திருந்து தங்கள் சொந்த சங்கடங்களைத் தெரிவித்தனர். அவற்றை எல்லாம் பொறுமையாகக் கேட்டு, அவர்களுக்கு ஆறுதல் சொன்னார் எம். பி. அவர்கள் சென்றதும் வேறொரு கோஷ்டியினர். அடுத்து மற்றொன்று. இப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேலைநிறுத்தம் செய்தனர். இவர்கள் சிலரின் மீது அரசாங்கம் ஒழுங்கு நடவடிக்கையும் எடுத்தது. தமிழ் மொழிச்சட்டம் காலஞ்சென்ற பிரதமர் திரு. எஸ். டபிள்யூ. ஆர். டி. பண்டார

கொள்கைகளையும் திட்டங்களையும் அமுல் நடத்தி அரசாங்கத்துக்கும் பொதுமக்களுக்கும் நாட்டுமக்களுக்கும் விசுவாசமாக நடந்து கொள்ளவேண்டும்.

## சீன - சோவியத் மோதல்

சீன - சோவியத் எல்லையில் மஞ்சூரியா பகுதியில் இருதரப்பு எல்லைக்காவல் துருப்புக்களுக்குமிடையில் சென்ற ஞாயிற்றுக்கிழமை ஏற்பட்ட கைகலப்பில் இரு தரப்பிலும் உயிர்ச்சேதம் ஏற்பட்டிருப்பதைத் தொடர்ந்து இரு நாடுகளிலும் ஆர்ப்பாட்டங்கள் நடைபெற்றுவருவதுடன் இருநாடுகளுக்கிடையிலான உறவுநிலை மேலும் மோசமடைவதற்கான அறிகுறிகள் தோன்றியுள்ளன. ஆனாலும் இரு நாடுகளுக்கிடையிலும் பெரிய சண்டை ஏற்படமாட்டாது; ஏற்படவும் கூடாது.

சீனாவும் சோவியத் யூனியனும் கம்யூனிஸ்ட் நாடுகள். ஒரு காலத்தில் மிக நெருங்கிய நட்புறவு பூண்டிருந்தவை இவை. கம்யூனிஸசித்தாந்தத்தில் ஏற்பட்ட வேறுபாடு இரு நாடுகளின் உறவையும் சீர்குலைத்தது. என்றாலும் வெளிவல்லரசுகள் இந்த இருநாடுகளில் எந்த நாட்டின் மீதும் ஆக்கிரமிப்புச் செய்தால் ஒன்றையொன்று சும்மா பார்த்துக் கொண்டிருக்கப் போவதில்லையென இரு நாடுகளின் தலைவர்களும் அடிக்கடி வலியுறுத்தி வந்திருக்கின்றனர்.

மஞ்சூரிய பகுதியில் இரு நாடுகளின் எல்லைக் காவல் துருப்புகளுக்குமிடையில் ஏற்பட்ட கைகலப்புக்கு இரு தரப்பினரும் ஒருவர் மீது ஒருவர் குற்றம்சாட்டியுள்ளனர். யார் முதலில் பிரச்னையைக் கிளப்பியது என்பதல்ல முக்கியம். பிரச்னை எப்படிக் கிளம்பியது; இதற்கு எப்படித் தீர்வுகாணலாம் என்பது தான் முக்கியம்.

கம்யூனிஸத்துக்குஎல்லை இல்லை. எல்லை இருக்கவும் கூடாது. எனவே சீன - சோவியத் எல்லைத் தகராறு உலகில் இந்த இரு நாடுகளின் மதிப்பையும் குறைக்கவே உதவும். எனவே இந்த எல்லைத் தகராறு வளர்ந்து இரு நாடுகளின் உறவை மேலும் மோசமடைவதைத் தவிர்க்க இரு நாட்டுத் தலைவர்களும் நேரில் சந்தித்துப் பேசுவது விவேகமான பயனுள்ள செயலாக இருக்கும்.

ஆசுகவி கல்லடி வேலுப்பிள்ளையின் நினைவுதினம் இன்றாகும்.

# வித்தகக் கவிஞன் புகழ் நினைவோம்

பொல்லடியி லும்பார்க்கப் பொல்லாத
துன் பிழைக்குஞ்
சொல்லடியால் யாழைத் திணறவைத்த
— கல்லடியான்
ஆசுகவி வேலுப் பிள்ளையெனும் ஆண்டகையின்
பேசுபுகழ் நினைவோம் புகழ்ந்து,

(வேறு)

சுற்றிய மதில்கள் தோறும்,
சுவர்களும் படலை தோறும்,
முற்றிய கருத்து மிக்க
வித்தகக் கவிதை தீட்டி,
வற்றிய ஞானம் கொண்ட
மக்களின் மனத்தைத் தூண்டும்
பெற்றியைக் கொண்ட வேலுப்
பிள்ளையை நினைப்பம் இன்றே.

—''முருகசூரியன்''

(யாழ்.— யாழ்ப்பாணத்தை

திரு. எஸ். டி. பண்டாரநாயகா-மாவோ சிந்தனைகளின் வழிநடந்து பாராளுமன்ற ஜனநாயகத்தை புரட்சி மூலம் தகர்க்க வேண்டும் என்று நம்பும் சீனச்சார்பு கம்யூனிஸ்ட் கட்சி ஆதரவாளர் ஆட்சி மன்றத்தை ''திருடர்கள் குகை'' என்று வர்ணிக்க ஆட்சி மன்ற நடைமுறைக்கும் அந்தஸ்துக்கும் ஒவ்வாத அவ்வார்த்தைகளை வாபஸ் பெற வேண்டுமென சபாநாயகர் கேட்டுக் கொண்ட போதும், திரு. பண்டாரநாயகா ஆட்சி மன்றத்தையும் அதன் உறுப்பினர்களையும் அவமதிக்கும் அச்சொற்றொடரை வாபஸ் பெறப்

## பற்குணதேவி . . .

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

வழ: நல்ல சுகமாக இருந்தபடியால் தான் முழுகினார்? ஆம்

வழ: எப்போது முழுகினார்? மத்தியானம் சப்பிட முன்பு

நீதியரசர்: அம்மாவிற்கு அடிக்கடி சுகமில்லாமல் வரும்? ஆம்.

நீதி: அடிக்கடி சுகமில்லாமல் வருவதால் அடிக்கடி குடிப்பார்? மாதத்திற்கு இரண்டு மூன்றுதடவை சுகமில்லாமல் வரும்

வழ: சம்பவம் நடந்த தினம் இருதடவை உமது தாயார் மதுபானம் வங்கி வந்தார்? சமான் வாங்கப் போனார்.

வழ: உமதுதாயார் குடிக்கிறது வழக்கம்? ஆம்

உமது தாயார் திறந்த விறாந்தையில் வழக்கமாகப் படுப்பார்?-தட்டி கட்டியிருக்கு.

வழ: எவரும் உள்ளே போகலாம்?- ஆம்.

வழ: நீரும் பற்குணதேவி படுத்திருந்த அறைக்குப்பக்கத்தில்வேறுஒருஅறைஇருந்தது?-ஆம்.

வழ: அந்த அறையில் தாயார் படுத்திருந்திருக்கலாம்?- சாமான்கள்போடப்பட்டிருந்தது.

வழ: விரும்பினுல் படுத்திருக்கலாம்?-ஆம்

வழ: உங்கள் ஊரில்தமிழ் பெண்கள் திறந்த விறாந்தையில் படுத்திருப்பது வழக்கமில்லை?- எனக்கு அதைப்பற்றித் தெரியாது.

வழ: சத்தம் கேட்டுத்தான் 2ம் முறை வெளியில் வந்தீர்?- ஆம்.

வழ: வெளியில் வரும் போது தாயாரில் தட்டுப்பட்டீரா?- இல்லை.

வழ: ஒருதலையணை இருந்தது?-பிறகுதான் கண்டேன்.

வழ: தாயாரின்கால் கதவுக்குக்கிட்ட இருந்தது?- ஞாபகமில்லை.

வழ: கதவிற்கு அப்பால் தலையணை இருந்தது?- ஆம்.

கொத்தலாவல சத்திய பிரமாணம் செய்து கொள்ள சபாநாயகரிடம் வந்தபோது திருமதி பண்டாரநாயகா, எதிர்க்கட்சிகளின் எதிர்ப்பைத் தெரிவிக்குமுகமாக எழுந்து வெளிநடப்புசெய்ய அவரைத் தொடர்ந்து ஏனைய எதிர்க்கட்சி உறுப்பினர்களும் வெளிநடப்பு செய்யவே, ''போங்கள் போங்கள் திரும்பி வராதீர்கள்'' என்று ஆளும் கட்சி ஆதரவாளர்கள் ஆரவாரிக்க, இந்தச் சூழலில் திரு. ஜோர்ஜ் கொத்தலாவல பண்டாரகம எம். பி.யாக சத்தியப்பிரமாணம் செய்து கொண்டு பதவி ஏற்றார்.

## தடுப்புக்காவலில் புகைப்படக்காரர்

பண்டாரகமை எம். பி. திரு. ஜோர்ஜ் கொத்தலாவல சத்தியப்பிரமாணம் செய்து கொள்வதைப் படம் பிடிக்கவென அனுமதி கேட்டுப் பெற்று வந்த ''ஜனதின'' (லங்கா சமசமாஜக் கட்சி சார்பான தினசரி) புகைப்படக்காரர், சத்தியப்பிரமாண வைபவத்திற்கு முன் நடந்த எதிர்க்கட்சிகளின் வெளிநடப்பையும் படம் பிடித்தார். எனவே சத்தியப்பிரமாண வைபவத்தை மட்டுமே படம் பிடிக்க அனுமதி வழங்கப்பட்டதெனக் கூறி, வெளிநடப்பைப் படம் பிடித்த குற்றத்திற்காக ஆட்சிமன்ற அலுவலர் திரு. சாம் விஜயசிங்க 'ஜனதின' புகைப்படக்காரரை தடுப்புக் காவலில் வைத்து விட்டார்!

இது மிகவும் முறையற்ற செயலென்றும் பிரிட்டிஷ் மகாராணி வாழும் பக்கிங்ஹாம் அரண்மனையைப் போல ஆட்சிமன்றத்தைக் கருதக்கூடாதென்றும் கூறிய டாக்டர் என். எம். பெரேரா எதிர்க்கட்சியினரின் வெளிநடப்பைப் புகைப்படக்காரர் படம் பிடித்தது சரிதான்என்றுவாதாடி. அவரைத்தடுத்துவைத்திருப்பது முறையற்றது என்று சபாநாயகரிடம் புகார் செய்தார்!

அடுத்தது கேள்வி நேரம்.

ஆரம்ப சூடு தணிந்து இடையிடையே நகைச்சுவை கலந்த பதில்கள் பரிமறப்பட்டு சகஜநிலைக்குத் திரும்பி கொண்டிருந்த போது திடீரென்று மீண்டும் பிரதமர் திரு. டட்லி சேனநாயக்காவுக்கும் திரு. டி. ப. இலங்கரத்தினவுக்கும் இடையில்வாக்குவாதம் ஏற்பட்டுவிட்டது.

## பிரதமர் டட்லி அளித்த தகவல்கள்

எதிர்க்கட்சித் தலைவர் பேசியதைத் தொடர்ந்து, பிரதமர்டட்லி சேனநாயக்கா எழுந்து ''தகவல் கொடுத்தவரின் முதல் வாக்குமூலத்தை மட்டுமல்ல தான் முன்பு சொன்னதெல்லாம் முழுக்க முழுக்கப் பொய் என்று ஏற்றுக்கொண்டு இறுதியாகக் கொடுத்த வாக்குமூலத்தையும் சேர்த்து, அதன்மீது பொலிஸார் நடத்திய முழு விசாரணை பற்றிய முழுத் தகவல்களையும் இந்தச்சபைக்கும் பொதுமக்களுக்கும் சமர்ப்பிக்கின்றேன்.'' என்று சொல்லி இரண்டு தரப்பு வாக்குமூலங்களையும் படித்துவிட்டு பொதுமக்களே ஒரு முடிவுக்கு வரட்டுமே பார்க்கலாம்'' என்று சவால் விடுத்தார் பிரதமர்!

''பொலிஸ் இலாகாவும் நானும் நடத்தவேண்டிய விசாரணைகளை எல்லாம் நடத்தி முடித்துவிட்டோம். திருமதி பண்டாரநாயக்காவுக்கு எந்தெந்த விதத்தில் எவ்வெப்போது பாதுகாப்புகள் தேவைப்படுகிறதோ, அந்தந்த விதங்களில் அவ்வப்போது பாதுகாப்புகள் தரவும் தயார்!'' என்று அறிவித்த பிரதமர் ''இந்தச் சதித்திட்டம் பற்றிய மூலத்தகவலே முழுக்க முழுக்கப் பொய்யானது என்பதை தகவல் கொடுத்தவரே ஒப்புக்கொண்ட பிறகு இதை வைத்துக்கொண்டு அரசியல் லாபம் சம்பாதிக்க சிலர் முனைகிறார்களே!'' என்று எதிர்க்கட்சியினரைச் சாடியபோதுதான் மீண்டும் சூடேற ஆரம்பித்தது.

## தகவல் கொடுத்தவர் கஞ்சாக் குடியர்

திருமதி பண்டாரநாயகாவைக் சொல்லும் சதித்திட்டம்பற்றித் தகவல் கொடுத்த முனிதாசா பெரேரா என்பவர் எப்படிப்பட்டவர் அவர் சொல்லுகின்றதகவல்களை நம்பலாமா? என்ற தனது தரப்பு நியாயங்களுக்கு ஆதாரம் தேடும் முகமாக, முனிதாசா பெரேரா 23-2-69பொலிசுக்குக்கொடுத்த வாக்குமூலத்திலிருந்து சில தகவல்களைப் பிரதமர் வாசித்தபோது, ஆளும்கட்சியினர் எதிர்க்கட்சியினரை எள்ளிநகையாடினர்; எதிர்க்கட்சியினரோ எள்ளும்கொள்ளுமாகவெடித்தனர்; வெகுண்டெழுந்தனர்.

பிரதமர் சொல்லிக் கொண்டேபோனார்.

மாகப் பயன்பட்டது!

## தண்டிக்கப்பட்டது யார்? நாங்களா?

'சோமராமாவைச் சொல்லுகிறார்களே! என்ன நடந்தது? வழக்கும் நடத்தினீர்கள்? விசாரணைக்கமிஷனும் நியமித்தீர்களே! தண்டிக்கப்பட்டவர்கள் யார்? அகப்பட்டவர்கள்யார்? கொலைகாரர்கள் யார்? யார்?என்று எதிர்க்கட்சியினரை நோக்கி அடுக்கடுக்காகக் கேள்விகளை அனுயாசமாக எடுத்து வீசினார் பிரதமர்.

'இறுதியில் தண்டனைபெற்றவர்கள் இந்தப்பக்கம்இருந்தவர்களா? (ஆளும்கட்சிஆசனங்களைச் சுட்டிக்காட்டி) இல்லை; அந்தப்பக்கத்தைச் சார்ந்தவர்களா? (எதிர்க்கட்சி ஆசனங்களைச் சுட்டிக்காட்டி) என்று ஆத்திரத்துடனும், அதேநேரத்தில் எதிர்க்கட்சியினரைசரியானபடி மடக்கிவிட்ட மகிழ்ச்சியுடனும் கேட்டார் பிரதமர்! ஆளும் கட்சியினரின் ஆரவாரமான கைதட்டுகளுக்கிடையே 'அவர்களுக்குப் பின்னல் நின்றவர்கள்யார்!' என்று எதிர்க்கட்சியைச் சார்ந்த திரு. மைத்திரி பாலாசேனநாயகா பிரதமரிடம் கேட்டுக்கொண்டேஇருந்தார் இரண்டுமூன்றுதரம் திரு மைத்திரிபாலா கேட்கவே பிரதமர் திரு டட்லி சேனநாயகா கோபம் கொழுந்துவிட்டெறிய ஆத்திரத்தால் கண்கள் சிவக்க என்ன சொன்னீர்? என்ன சொன்னீர்? என்றுகேட்டுக்கொண்டே கையையும்மடக்கிக்கொண்டு எதற்கும் தயார்தான் என்றதோரணையில் எதிர்க்கட்சி முன்வரிசையில் திருமதி பண்டாரநாயகர்வுக்கு வலப்பக்கத்தில் அமர்ந்திருந்த திரு. மைத்திரிபாலா சேனநாயக்காவை நோக்கி நடை போட்டார் டட்லி.

எடுத்து வைக்கும் ஒவ்வொரு அடிக்கும் ''என்ன சொன்னீர்?'' என்று கேட்டுக்கொண்டே சென்ற டட்லி, மைத்திரிபாலாவின் ஆசனத்துக்கருகிலேயே சென்றுவிட்டார். என்ன நடக்குமோ? இருவருக்கும் இடையில் கைகலப்பு ஏற்படுமோ என்று திகிலடைந்த நிலையில் பார்வையாளர்கள் பார்த்திருக்கும் போதே இரு தரப்பு உறுப்பினர்களும் ஒருவரையொருவர் ஏசிக்கொண்டும், பேசிக்கொண்டும் பழிச்சொல்களை சர்வசாதாரணமாக வீசிக்கொண்டும் முஷ்டிகளை மடக்கிக்கொண்டு முன்னேற ஆரம்பித்துவிட்டனர்.

ஆட்சிமன்ற அலுவல்கள் ஸ்தம்பித்தன. பத்து நிமிடங்கள் ஒரே களேபரம்.

மாவுக்கு விசேஷ விளம்பரம் கிடைக்கமுடிந்துள்ளது. அடுத்த தேர்தலில் இதுவும் அவருக்கு ஒரு நன்மையாக இருக்கலாம். உயிருக்கே ஆபத்து ஏற்படுவதாயினும், அரசியல் 'மூட்டைப்பூச்சி' கடித்தவர்களுக்கு, அதை விட்டுவிட மனம் லேசில் வருமா?

0 0 0

தொண்டனேன் பிறந்து
வாளா தொல்வினைக்
குழியில் வீழ்ந்து
பிண்டமே சுமந்து நைந்து
போவதோர் வழியுங்
காணேன்
அண்டனே அண்டவாரை
அறிவனே அஞ்சல்
லென்னாய்.
தெண்டிரைப் பழனஞ்
சூழ்ந்த திருக்கொண்
டீச்சரத்துளானே.
—அப்பர் அடிகள்.

## ஆண்டு விழா

குரும்பசிட்டி, வியாகுப்பிழான் இந்து இளைஞர் சங்க முதலாவது ஆண்டு விழா வெள்ளிக்கிழமை கற்கரை கற்பகவிநாயகர் ஆலய மண்டபத்தில் நடைபெறவிருக்கிறது. சொற்பொழிவு கூட்டுப்பிரார்த்தனை, இன்னிசை போன்ற நிகழ்ச்சிகள் இதில் இடம்பெறும்.

## தேவை

ஆனைக்கோட்டையில் புதிதாக திறக்கஇருக்கும் ஓர் ஆங்கில வைத்தியசாலைக்கு ஓய்வுபெற்ற உதவி வைத்திய அதிகாரி பங்காளராக தேவை. விண்ணப்பங்கள் 12-3-69 க்கு முன்னதாக ஏற்றுக்கொள்ளப்படும் விண்ணப்பம் அனுப்பும் முகவரி S. சுந்தரலிங்கம், 197/1 நாவலர்வீதி, யாழ்ப்பாணம். 540

## மரண அறிவித்தல்

**விசாலாட்சி - ஐயாத்துரை**

விசாலாட்சி சிவபதம் அடைந்தார். இவர் ஐயாத்துரையின் அருமை மனைவியும் குமாரசுவாமி, காலம் சென்ற தாமோதரம்பிள்ளை போஸ்மாஸ்டர் அவர்களின் மைத்துணியுமாவர். பூதவுடல் 16,14 சீனியர் லேன் கலட்டியில் இருந்து தகனக் கிரியைகளுக்காக 7-3-69 மாலை 2 மணிக்கு கோம்பையன்மணல் மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். 738

காகக் காத்திருந்து தங்கள் சொந்த சங்கடங்களைத் தெரிவித்தனர். அவற்றை எல்லாம் பொறுமையாகக் கேட்டு, அவர்களுக்கு ஆறுதல் சொன்னார் எம். பி. அவர்கள் சென்றதும் வேறொரு கோஷ்டியினர். அடுத்து மற்றொன்று. இப்படியாகப் பகல், இரவு பாராமல் யார் வந்தாலும் ஆத்திரப்படாமல், வந்தவர் சொல்லுவதையெல்லாம் மிகமிகப் பொறுமையாகக் கேட்டு அவர்களது கஷ்டங்களைத் தீர்க்கத் தம்மாலானதை எல்லாம் எம். பி. செய்யவேண்டியுள்ளது. இல்லாவிட்டால் அடுத்த தேர்தலில் மக்கள் ஆதரவு இருக்குமா?

பொதுமக்களுக்காகத் தம் நேரத்தை இவ்விதம் அர்ப்பணிக்க முன்வருவது மேலான காரியம்தான் இதைப்பற்றி ஓரன்பருடன் கூறியபோது, இப்படி நேர்மையான எம். பி.மார்கள் ஒருசிலர் தானென்றும், பலர் தம் சுயநலத்துக்காகவே அப்பதவி வகிப்பதாகவும் சொன்னார். என்றாலும் பொதுமக்களுக்கு உண்மை எப்படியும் தெரியாமலிருக்குமா!

0 0 0

''ஹூ'' (யார்) என்ற ஆங்கிலச் சொல், ''யூ'' (நீங்கள்) என்று பிரதமர் டட்லியின் செவிகளில் தவறாகக் கேட்டதாலேயே இந்த அமளி ஏற்பட்டுள்ளது. இனி இவ்விதம் ஏற்படாமல் தடுக்க வழியென்ன?

அமைச்சர்கள் உள்ளிட்டு இரு தரப்பு எம். பி.மார்களும் அடிக்கடி கலந்துபேசி நல்லுறவை வளர்த்துக் கொண்டால், இப்படியான மோதல்கள் ஏற்படாமல் தடுக்கலாம். ஆனால் அடுத்த தேர்தல் போட்டியை நினைத்துக்கொண்டு, இரு தரப்பினரும், விரோதிகள் போல் வாழ்ந்தால், தப்பெண்ணங்கள் வளரவும், நாட்டின் நல்லாட்சிக்கு ஆபத்து ஏற்படவும் செய்கிறது.

தமிழிலோ, சிங்களத்திலோ பேசியிருப்பின், இவ்வித சங்கடம் ஏற்பட்டிராதென்றும், இரு தரப்பினரும் ஆங்கிலத்திலேயே வாக்குவாதம் செய்ததால் தான், இந்த அனர்த்தம் ஏற்பட்டதாகவும் மற்றோர் அன்பர் தெரிவிக்கிறார்! வேண்டாத பெண்சாதி கை பட்டால் குற்றம் கால் பட்டால் அபராதம்!

0 0 0

சிறிமாவைக் கொலைசெய்யச் சதி நடந்ததாக போலீஸில் புகார் கூறியவர்மீது வழக்குத் தொடரப்போவதாக ஒரு செய்தி தெரிவிக்

(7-ம் கலம் பார்க்க)

இப்பத்திரிகை. ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேலை வீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1969-ம் ஆண்டு மார்ச் மாதம் 6-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org